விலை ரூபா: 15.00

Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 பங்குனி 01 திங்கட்கிழமை (15.03.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 86

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாந்
தர தொழிற்சாலையிலிருந்து
தயாரிக்கப்பட்டது ராம்கோ சிமெந்து

# கிளிநொச்சியில் தேர்தல் பிரசாரம் செய்ய இராணுவத்தின் அனுமதி பெற வேண்டும்

## கபே அமைப்புக் குற்றச்சாட்டு

(கொழும்பு)

**கிளிநொச்சிப் பகுதியில் அரசியல் கட்சிகள் பிரசாரங்களை மேற்கொள்வதற்கு இராணுவத்தினரின் அனுமதி பெறவேண்டிய நிலை காணப்படுவதாக நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கமான கபே அமைப்புக் குற்றஞ்சாட்டியுள்ளது.**

இலங்கையில் தேர்தல் தொடர்பான வன்முறைகள் அதிகரித்து வருகின்றன என்று நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கமான கபேயின் இயக்குநர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்தார்.

தேர்தல் அறிவிக்கப்பட்டு இதுவரை 40இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் தமக்குக் கிடைத்துள்ளதாக அந்த அமைப்பு கூறுகின்றது.

இம்முறை ஒவ்வொரு கட்சிக்குள்ளே இருக்கும் உறுப்பினர்களுக்கிடையே நடக்கும் மோதல்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

சில குறிப்பிட்ட (16 ஆம் பக்கம் பார்க்க)

## நிபுணர் குழுவை நியமிப்பதற்கான இறுதித் தீர்மானம் எடுக்கவில்லை

### ஐக்கிய நாடுகள் சபை அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கை மனித உரிமை மீறல் விவகாரம் குறித்த நிபுணர்கள் குழுவினை நியமிப்பது தொடர்பில் ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் இன்னமும் இறுதித் தீர்மானம் எடுக்கவில்லை எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்த விடயம் தொடர்பில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் நவநீதம்பிள்ளை உள்ளிட்ட முக்கியஸ்தர்களுடன் பான் கீ மூன் கலந்தாலோசித்து வருவதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

நிபுணர்கள் கூடிய விரைவில் நியமிக்கப்படக் கூடிய சாத்தியம் மிகவும் அரிதாகவே காணப்படுவதாக ஐக்கிய நாடுகளின் பேச்சாளர் பாரா ஹக் (02 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கூட்டமைப்பு மீது அரசு குற்றச்சாட்டு

(கொழும்பு)

தமிழ் தாயகக் கோட்பாட்டின் அடிப்படையிலான சுயாட்சியை வலியுறுத்தி வரும் தேர்தலில் மக்கள் ஆணையைப் பெறும் முயற்சியில் கடும்போக்காளர்களான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இறங்கியிருக்கின்றது.

இவர்கள் சர்வதேச சமூகத்தைக் கொண்டுவர முயல்வது பெரும்பாதிப்பையே ஏற்படுத்தும் என அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

சர்வதேச தலை (16 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் பிரசாரத்திற்கு முன் அனுமதி

## கிளிநொச்சி இராணுவத்தினருடன் தமிழ்க் கூட்டமைப்பு இன்று பேச்சு

(கொழும்பு)

கிளிநொச்சியில் தேர்தல் பிரசார நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு இராணுவத்தின் அனுமதி பெற வேண்டும் என்ற கட்டுப்பாடு விதிக்கப்பட்டமை குறித்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்கள் இன்று அப் பகுதி இராணுவத்தினருடன் பேச்சுநடத்தவுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த வேட்பாளர்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் சென்று தேர்தல் பரப்புரைகளில் ஈடுபட முடியாத நிலைமை ஏற்பட்டிருப்பதாக அந்தக் கூட்டமைப்பின் உறுப்பினர்களில் ஒருவராகிய சுரேஸ் பிரேமச்சந்திரன் குற்றஞ்சாட்டியுள்ளார். (02 ஆம் பக்கம் பார்க்க)

## போராட்டங்களை முன்னெடுக்கத் தீர்மானம்

(கொழும்பு)

ஜெனரல் பொன்சேகா மீது நாளை அரசு இராணுவ விசாரணைகளை மேற்கொள்ளும்போது தென்னிலங்கை மக்கள் ஒவ்வொரு நகரத்திலும் எதிர்ப்புப் போராட்டங்களை மேற்கொள்ள வேண்டும் என ஜனநாயக தேசிய முன்னணி அழைப்பு விடுத்துள்ளது.

நாளை செவ்வாய்க்கிழமை அரசு ஜெனரல் பொன்சேகா மீதான இராணுவ விசாரணைகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது. இந்த நாளில் நாட்டு மக்கள் தமது நகரங்களில் எதிர்ப்புப் (16 ஆம் பக்கம் பார்க்க)

## அனோமா பொன்சேகா தாக்கல் செய்த ஆட்கொணர்வு மனு இன்று விசாரணைக்கு

(கொழும்பு)

ஜெனரல் சரத் பொன்சேகா சட்டவிரோதமாக இராணுவத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதாகக் கூறி தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆட்கொணர்வு மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இன்று பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

அனோமா பொன்சேகா தாக்கல் செய்துள்ள இந்த மனுவில் இராணுவத் தடுப்புக் காவலிலுள்ள ஜெனரல் சரத் பொன்சேகாவை விடுதலை செய்யுமாறு கோரப்பட்டுள்ளது.

ஜெனரல் சரத் பொன்சேகா இராணுவத்திலிருந்து விலகியுள்ளதால் இராணுவச் சட்டத்திற்கு உட்பட மாட்டார் எனவும் நாட்டின் சாதாரண சட்டத்தின் கீழ் அவருக்கெதிரான குற்றச்சாட்டுக்களை விசாரிக்க வேண்டும் எனவும் அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை (16 ஆம் பக்கம் பார்க்க)

## உதவித் திட்டங்களைக் கைவிட தொண்டர் அமைப்புகள் திட்டம்

(கொழும்பு)

வட பகுதியில் இடம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான வளங்களை ஐ.நா. மற்றும் ஏனைய மனிதாபிமான அமைப்புக்கள் இழந்து விட்டதால் இடம்பெயர்ந்த மக்கள் பெரும் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவது,

வவுனியாப் பகுதியில் உள்ள மெனிக்பாம் இடம்பெயர்ந்தோர் முகாம்களில் தங்கியுள்ள ஒரு இலட்சம் தமிழ் மக்களுக்கான குடிநீர் விநியோகத்தைக் கூட மேற்கொள்ள முடியாத நிலையில் ஐ.நா.மற்றும் ஏனைய மனிதாபிமான அமைப்புக்கள் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.


ஐக்கிய நாடுகள் (16 ஆம் பக்கம் பார்க்க)






நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## பேசும் படம்



யாருக்காக... இவை யாருக்காக...
(காக்கைத்தீவு திருவாவடுதுறை கிராமம்)

# பொலிஸ் உயரதிகாரிகள் சிலருக்கு விரைவில் மாற்றம் - ரிவிர செய்தி

(கொழும்பு)

பொலிஸ் உயர் பதவிகளில் விரைவில் மாற்றம் ஏற்படுத்தப்பட உள்ளதாக ரிவிர பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

ஒழுக்கவீனமாக செயற்படல், ஊழல்மோசடிகளில் ஈடுபடல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்ட உயர் பொலிஸ் அதிகாரிகள் சிலருக்கு எதிராகவே இவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பல்வேறு ஊழல் மோசடிகளில் குறித்த அதிகாரிகள் ஈடுபட்டுள்ளதாக அரசாங்கத்திற்கு முறைப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் இவ்வாறு ஊழல் மோசடி களில் ஈடுபட்ட பொலிஸ் உயரதிகாரிகளுக்கு விரைவில் கட்டாய ஓய்வு வழங்கத் தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கமைய எதிர்வரும் பொதுத் தேர்தலின் பின்னர் குறித்த பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-2)

# மீளக்குடியமர்ந்த தரம்-5 மாணவர்களை இன்று பதிவு செய்யுமாறு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மீட்கப்பட்ட பிரதேசங்களிலிருந்து வருகை தந்து யாழ். கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி கற்கும் இவ் வருடம் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்கள் தமது விபரங்களை இன்று யாழ். கல்வி வலய திட்டமிடல்பிரிவில் பதிவு செய்யுமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது,

மீட்கப்பட்ட பகுதிகளில் கல்வி கற்று தற்போது இடம் பெயர்ந்து யாழ்ப்பாணக் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி கற்கும் வருடம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்கள் தாம் முன்னர் கல்வி கற்ற பாடசாலை உள்ளிட்ட விபரங்களை யாழ். வலயக்கல்வி அலுவலக திட்டமிடல் பிரிவில் பதிவு செய்ய வேண்டும்.

இதன்மூலம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் அவர்களுடைய சொந்த மாவட்டங்களில் பதிவு செய்யப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். இதற்கானவழிகாட்டலைபாடசாலை அதிபர்கள் மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் கூறினார். (ச-5)

# இலங்கை அரசின் ஆட்சியைக்கண்டு மேற்குலக நாடுகளுக்கு பொறாமை

## பசில் ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்தின் வெற்றிகரமான ஆட்சி முறைமையை கண்டு மேற்குலக நாடுகள் பொறாமை கொண்டுள்ளதாக ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பயங்கரவாதத்தை கையாண்ட விதம் மேற்குலக நாடுகளை வியப்பில் ஆழ்த்தியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். உலகின் பல நாடுகள் பயங்கரவாதத்தை முடிபுறுத்த முடியாமல் அல்லலுறுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.


ஒரு புறம் வெற்றிகரமாக யுத்தத்தை முன்னெடுத்த அதேவேளை நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.


மேற்குலக நாடுகளுடன் கைகோர்த்து செயற்படுவதில் இலங்கை அரசாங்கத்திற்கு எவ்வித தயக்கமும் கிடையாது. அதற்காக எந்த காரணத்திற்காகவும் இலங்கை மண்டியிடாது இறைமையுடையசுதந்திரநாடுஎன்றஅடிப்படையில் மேற்குலக நாடுகளுடன் பணியாற்ற இலங்கை அரசாங்கம் விரும்புகின்றது.

ஜி.எஸ்.பி.பிளஸ் சலுகை திட்டத்தை எப்போதோ இடைநிறுத்தியிருக்கலாம் எனவும், அரசாங்கத்தை நெருக்கடியான நிலைக்கு இட்டுச்செல்லும் நோக்கிலேயே ஜனாதிபதி தேர்தலின்போது சலுகைத்திட்டம் இரத்துச் செய்யப்பட்டதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-5)

## ராஜதந்திரி ஒருவர் மீது திருட்டுக் குற்றச்சாட்டு

ஜப்பானுக்கான இலங்கை இராஜதந்திரி ஒருவர் மீது திருட்டுக்குற்றம் சுமத்தப்பட்டுள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. பெறுமதியான ஓவியம், பியானோ மற்றும் தொன்மையான சுவர்க் கடிகாரம் ஒன்று ஆகியவற்றை குறித்து இராஜதந்திரி களவாடிச் சென்றுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இந்த சம்பவம் தொடர்பில் இலங்கை வெளிவிவகார அமைச்சு ஏற்கனவே விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. (ச)







சர்வதேச இந்து மதகுருமார் ஒன்றியத்தில் நேற்று நடைபெற்ற கௌரவிப்புவிழா மற்றும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வுகளில் இந்து மதகுருமார் ஒன்றிய பிரதிநிதிகளையும் பிரதமவிருந்தினராக கலந்து கொண்ட யாழ். வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை ஆகியோர் சான்றிதழ் வழங்கு வதையும் படங்களில் காணலாம். படங்கள்:- டுசாந்தன்

## சைக்கிள்களை திருடிய இருவர் பொதுமக்களால் நையப்புடைப்பு

யாழ். போதனா வைத்தியசாலைக்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிள்களைத் திருடிச் சென்ற இரு இளைஞர்கள் பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு யாழ். பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

இச்சம்பவம் நேற்று மதியம் 11.50 மணியளவில் இடம் பெற்றுள்ளது. யாழ். போதனா வைத்தியசாலையிலுள்ள நோயாளர்களை பார்வையிடுவதற்காக சென்றவர்கள் வீதியோரமாக சைக்கிள்களை நிறுத்திவிட்டு வைத்தியசாலைக்குள் சென்றுள்ளனர். இதனை அவதானித்த திருடர்கள் வேறு திறப்பை பயன்படுத்தி இரண்டு சைக்கிள்களை திருட முற்பட்டுள்ளனர். அவர்கள் மீது சந்தேகம் கொண்ட வைத்தியசாலையின் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் பொதுமக்களுடன் துரத்திச்சென்று திருடர்களை மடக்கிப்பிடித்தார். பிடிபட்ட இருவரும் பொதுமக்களால் நயப்புடைக்கப்பட்டபின்னர் யாழ். பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர். (ச-30)

**ஆனந்தி திருமணசேவை**

**மணமகள் வேண்டும்**

வியாபார முதல்வர், 1981-ல் பிறந்த, 8-ல் செவ்வாய் தோஷமுடைய, கிரக பாவசங்கியை 66 1/4, திருவோண நட்சத்திரம், கவர்ச்சியும் 5 அடி 4 அங்குல உயரம் கொண்ட, காலசர்ப்பதோஷமுடைய மணமகனுக்கு (K) பொருத்தமான பெண்மணியை உள்நாடு அல்லது வெளியூரில் விரும்பு கின்றோம். நேரடியாக, அஞ்சல் வழி தொலைபேசி 021222 8708 மூலமும் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:-
V.A. சிவராசா சோதிடர்,
56, அம்மன் றோட் கந்தர்மடம், யாழ்ப்பாணம் (876)

## நிபுணர்...

தெரிவித்துள்ளார்.

தெரிவு செய்யப்பட்ட சில நாடுகளுக்கு மட்டும் கட்டுப்பாடுகளை விதிப்பது ஏற்றுக் கொள்ள முடியாதென அணிசேரா நாடுகள் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## கிளிநொச்சி...

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் போட்டி யிடுவதற்குக் கிளிநொச்சியில் வசிக்கின்றவர் களும் வேட்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

அப்படியிருந்தும் அந்த வேட்பாளர்கள் அங்கு மக்கள் மத்தியில் தேர்தல் பரப்புரைகளை செய்ய இராணுவத்தின் அனுமதி பெறப்பட வேண்டும் எனச் சுட்டிக்காட்டி கிராமங்களுக்குள் செல்வதற்கு அவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருப்பதாக சுரேஸ் பிரேமச்சந்திரன் பி.பி.ஸிக்குத் தெரிவித்தார்.

ஏனைய கட்சிகளுக்கு எந்தவிதமான கட்டுப்பாடுகளும் விதிக்கப்படுவதில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டுகின்றார். இது குறித்து தேர்தல் திணைக்கள அதிகாரிகளிடம் முறையிட்டபோதிலும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்றும் இந்த நிலைமை குறித்து இன்று கிளிநொச்சிக்குச் சென்று அங்குள்ள இராணுவ அதிகாரிகளிடம் பேச்சுக்கள் நடத்தப் போவதாகவும் சுரேஸ் பிரேமச்சந்திரன் தமிழோசையிடம் தெரிவித்துள்ளார். (ச-5)

# மடிக் கணனி கையளிப்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வி வலயத்துக்குட்பட்ட வகை II, வகை III பாடசாலைகளுக்கு மடிக்கணனி கையளிக்கும் நிகழ்வு இன்று முற்பகல் 11.30 மணிக்கு ஆனைக்கோட்டை வண். சிறி வைத்திலிங்கம் வித்தியாலயத்தில் நடைபெறும். இந் நிகழ்வுக்கு வகை II, வகை III ஐச்சேர்ந்த பாடசாலைகள் அதிபர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (ச)



# இன்று ஒரு தகவல்

## கடும் விரதம்

"புத்தாண்டு வாழ்த்துக்கள்!" என்று சொல்லிக் கொண்டு வந்தார் என்னுடைய நண்பர்.

"வாங்க" என்று கூப்பிட்டு வீட்டுக்குள் உட்கார வைத்தேன்.

"என்ன சாப்பிடுறீங்க? கோப்பியா? ரீயா?" என்று கேட்டேன்.

"இன்றிலிருந்து புதிதாக ஒரு நல்ல பழக்கத்தை கடைப்பிடிக்கப் போகிறேன்" என்றார்.

"என்ன அது?" என்று கேட்டேன்.

"வேண்டப்பட்டவர்கள் எதைக் கொடுத்தாலும் அதை வேண்டாம் என்று சொல்லாமல் சாப்பிடுவது" என்றார்.

"அப்படியானால் இன்றைக்குத் தகவலை அவசியம் நீங்க கேட்க வேண்டும்" என்றேன்.

"சொல்லுங்க கேட்கிறேன்" என்றார்.

நான் சொல்ல ஆரம்பித்தேன். நண்பர் ஒருத்தர் எனக்கு எழுதியனுப்பியிருந்த கதை.

ஒரு ஊரில் ஒரு சாமியார் இருந்தார். ஒவ்வொரு ஊராகப் போய்க் கொண்டிருப்பார். அவர் ஒரு விரதம் மேற்கொண்டிருந்தார்.

அதாவது யாராவது சாப்பாடு போடுகிறேன் என்று கூப்பிட்டுக் கொண்டு போய் எதைப் போட்டாலும் சாப்பிடுவது என்ற விரதம். தனக்குப் 'பிடிக்குதோ... பிடிக்கவில்லையோ... எப்படியாவது கஷ்டப்பட்டு சாப்பிடுவார். வாயே திறக்கமாட்டார். சாப்பிடுவதற்கு மட்டும் தான் வாயைத் திறப்பார். பேசமாட்டார்.

இப்படிப்பட்டவர் ஒருநாள் ஒரு தம்பதி வீட்டுக்குப் போனார். அவர்கள் தான் இவரைஅழைத்துக் கொண்டு போனார்கள். உட்கார வைத்து இலை போட்டார்கள். சாப்பாடு பரிமாறினார்கள்.

இவரும் சாப்பிட ஆரம்பித்தார்.

அவர்களுக்கு ஒரு கவலை.

அதாவது... இந்த சுவாமி எப்பொழுதும் மௌன விரதத்திலே இருப்பவர். அவராக தனக்கு இன்னது வேண்டும் என்று கேட்டு வாங்கிக் கொள்ள முடியாது. அதனால் இவர் எதை ரசித்துச் சாப்பிடுகிறாரோ அதை இன்னமும் போடலாம் என்று நினைத்து அவரை மிகவும் அக்கறையாக கவனித்துக் கொண்டேயிருந்தார்கள்.

அன்றைக்குச் சமையலில் எதிர்பாராத விதமாக சிறிய சிரட்டைத் துண்டொன்று கலந்து விட்டது. அது சாமியாரின் இலையில் இருந்தது.

அவர்தான் எதையும் மிச்சம் வைக்காமல் சாப்பிடுவாராயிற்றே! அதனால் மிகவும் கஷ்டப்பட்டு அந்த சிரட்டைத்துண்டை கடித்து விழுங்கி விட்டார்.

இதை அந்தக் கணவர் பார்த்து விட்டார். உடனே, மனைவியிடம் ரகசியமாக ஏதோ சொன்னார்.

அந்த அம்மா உடனே கொல்லைப் பக்கமாக ஓடினார். ஒரு சிரட்டை எடுத்துக் கழுவிக் கொண்டு வந்தார். அதை அம்மியில் வைத்துப் பக்குமாக நொறுக்கி சாமியாரின் இலையில் வைத்து விட்டார். மிகவும் பணிவாக "சாப்பிடுங்க சாமி" என்று வேண்டிக் கொண்டார். "இது உங்களுக்குப் பிடிக்கும் என்று எங்களுக்குத் தெரியாமல் போய்விட்டது. மன்னிக்க வேண்டும்" என்று வேறு கேட்டுக் கொண்டார்.

சாமியார் முழித்துப் பார்த்தார். தன் விரதத்தின் மீதே அவருக்கு அசாத்திய கோபம் வந்து விட்டது. மிகவும் நொந்து போய் விட்டார்.

என்னடாஇது... இப்பத்தான் ஒரு துண்டைக் கடித்து மெதுவாக உள்ளே தள்ளினோம். அதற்குள் முழு சிரட்டையே வந்து விட்டதே என்ன செய்வது? என்று நினைத்தார். அவருடைய கண்ணில் நீர் தழும்ப ஆரம்பித்து விட்டது.

விரதத்தை விட முடியாதே என்ன செய்வது? ரொம்பக் காலமாக கடைப்பிடிக்கும் விரதமாச்சே!

மெதுவாக அந்த ஓட்டை எடுத்து சாப்பிட ஆரம்பித்தார். கண்களெல்லாம் கலங்கிப் போய்விட்டது. இதை அந்தக் கணவர் பார்த்தார். மனைவியிடம் சொன்னார்.

"சுவாமிஜியின் கண்ணைக் கவனித்தாயா? அவ்வளவும் ஆனந்தக் கண்ணீர். சிரட்டைக்கும் அவருக்கும் எப்படி இவ்வளவு விருப்பமோ தெரியவில்லை" என்றார்.

அதற்கு அந்த அம்மா சொன்னார்.

"பெரிய யோகிகளெல்லாம் இப்படித்தான். அவர்களுடைய செய்கை நமக்குப் பிடிபடாது" என்றார்.

"இவ்வளவு தூரத்திற்கு அதை ரசிச்சு ருசிச்சு சாப்பிடுவார் என்று தெரிந்திருந்தால், நாம் சமைத்திருக்காமல் நிறைய சிரட்டை பொறுக்கிக் கொண்டு வந்திருக்கலாமே" என்று வேறு கவலைப்பட்டனர்.

"இரு இதோ வந்து விடுகிறேன்" என்று அந்தக் கணவர் கொல்லைப் பக்கமாக ஓடினார். அங்கே கிடந்த சிரட்டைகளை யெல்லாம் பொறுக்கிக் கொண்டு வந்து கொட்டினார். அந்த அம்மா அவசர அவசரமாக அதை நொறுக்கி சாமியாரின் இலையில் போட்டுக் கொண்டே இருந்தார். அவரும் மென்று விழுங்கிக் கொண்டே இருந்தார். கணவர் பார்த்தார். ஒரு கூடை இருந்தால் குடு. பக்கத்து வீட்டுக்கெல்லாம் போய் சிரட்டை பொறுக்கிக் கொண்டு வருகிறேன் என்றார்.

மனைவியும் கூடையை எடுத்துக் கொடுத்தார். அவர் அதை வாங்கிக் கொண்டு தெருப்பக்கமாகப் போனார். அந்த அம்மா சிரட்டைகளை நொறுக்குவதற்காக அம்மிக் குழவியை எடுக்கப் போனார். சாமியார் பார்த்தார். இனிமேல் தாக்குப் பிடிக்க முடியாது. இதுதான் சமயம் என்று நினைத்தார். அவசரமாக எழுந்து கொல்லைப் பக்கமாக ஓடி வேலியைத் தாண்டி குதித்தார். ஒரே ஓட்டம். மனைவி இதைப் பார்த்து விட்டார்.

"சுவாமி கோபித்துக் கொண்டு போகிறார். சீக்கிரமாக ஓடி வாங்களேன்" என்று கத்தினார். கணவர் கூடையுடன் ஓடி வந்தார். அதற்குள் சாமியார் சிட்டாய்ப் பறந்து போய் விட்டார். எப்படி இருக்கிறது இந்தக் கதை? என்று நண்பரிடம் கேட்டேன்.

"ஹி... ஹி..." என்றார். "ஏன் இப்படி சிரிக்கிறீங்க" என்றேன்.

ஆரம்பத்தில் நான் உங்களிடம் சொன்னதை வாபஸ் வாங்கிக் கொள்கிறேன் என்றார்.

"இருந்தாலும் இன்றைக்குப் புதுவருஷம். அதனால் நாங்க எதைக் கொடுத்தாலும் நீங்க சாப்பிட்டுத்தான் ஆக வேண்டும்" என்றேன்.

நண்பர் யோசித்தார். "சரி அப்படியானால் எனக்கு டம்ளர் இல்லாத காப்பி மட்டும் குடுங்க என்றார்.

டம்ளரையும் சாப்பிடவேண்டி வந்து விடுமோ என்ற பயம் அவருக்கு!

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்ட கட்டுரைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு யாழ் பல்கலைக் கழக சட்டமாணவர் சங்கத்தினால் பாடசாலை மாணவர்களுக்கெனவும் திறந்த பிரிவாகவும் கட்டுரைப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இப் போட்டியில் பாடசாலை மாணவர்களுக்குரிய தலைப்புக்களாக இலங்கையில் பெண்களின் சமூக நிலை, பெண்களின் சமத்துவம் போருக்குப் பின்னரான அபிவிருத்தியில் பெண்கள் ஆகிய தலைப்புக்களில் ஒன்றை தெரிவு செய்து 1500 சொற்களுக்குட்பட்டதாக அமைத்தல் வேண்டும் எனவும் ஆக்கங்கள் பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனவும் குறிப்பிடப்படுகிறது.

மேலும் திறந்த பிரிவில் எவரும் பங்கு பற்றலாம் எனவும் ஆக்கங்கள் சுயமானவையாக இருத்தல் வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் தலைப்புக்களாக பெண்களின் பாதுகாப்புத் தொடர்பான தேசிய, சர்வதேச சட்டங்களில் புதிய அணுகுமுறைகளின் அவசியம் தேசத்தைக் கட்டி யெழுப்புவதிலும் அபிவிருத்தியிலும் பெண்களின் பங்களிப்பு ஆகிய தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவு செய்து 3000 சொற்களுக் குட்பட்டதாக அமைத்தல் வேண்டும் எனவும் போட்டியாளர்களின் விபரம் தனியாக இணைத்து அனுப்பப்படுதல் வேண்டும் எனவும் கட்டுரையின் எவ்விடத்திலும் போட்டியாளர் பற்றிய விபரம் குறிப்பிடப்படலாகாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்டுரைகளை எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் சட்டமாணவர் சங்கம் சட்டத்துறை, யாழ் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(6-4)

# யாழ்.வர்த்தக சங்கம் நடாத்தும் மாபெரும் வர்த்தக கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ் வர்த்தக சங்கத்தினால் நடத்தப்படும் மாபெரும் கண்காட்சி எதிர்வரும் 27, 28, 29 ஆம் திகதிகளில் யாழ் வேம்படி மகளிர் கல்லூரியிலும், யாழ் மத்திய கல்லூரியிலும் நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சியில் இலங்கையில் உள்ள பெரிய உற்பத்தி நிறுவனங்கள், இறக்குமதியாளர்கள், சந்தைப் படுத்துவோர் என பல நிறுவனங்கள் பங்குபற்றவுள்ளன.

இக்கண்காட்சியில் உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் முகமாக அவர்களுக்கு தேவையான இட ஒதுக்கீடு பெற்றுக் கொடுக்கப் படவுள்ளது. உடனடியாக வந்து தங்களுக்குரிய இட ஒதுக்கீடுகளை பெற்றுக் கொள்ளுமாறு யாழ் வர்த்தக சங்கத்தினரால் கேட்கப்பட்டுள்ளது.

இதற்கான சலுகைக் கட்டணமாக 5 ஆயிரம் ரூபா மட்டுமே அறிவிடப்படுவதாகவும் குறிப்பிடப்படுகிறது.

மேலும் இக்கண்காட்சியில் மாலை நிகழ்வுகளாக மாலை 6 மணிமுதல் இரவு 9 மணி வரை யாழ்ப்பாண கலாசாரத்தை பின்னணியாக கொண்ட கலை நிகழ்ச்சிகள் யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளதாகவும் வர்த்தக சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.

(2-4)



சுன்னாகம் மக்கள் வங்கியின் மத்திய மயப்படுத்தப்பட்ட தரமுயர்த்திய கணனி வங்கிச் சேவையின் தொடக்க விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் வாடிக்கையாளர்களிடமிருந்து ஆரம்பவைப்பினை ஏற்பதையும், அருகில் முகாமையாளர் மா.சந்திரகாந்தன், செயற்பாட்டு முகாமையாளர் சு.இராசமனோகரன், மத்திய மயப்படுத்தப்பட்ட தரமுயர்த்திய கணனி வங்கிச் சேவைக்காக தலைமையகத்திலிருந்து வருகைதந்த பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் வங்கி உத்தியோகத்தர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# இராசி பலன்

15-03-2010
(பங்குனி 1, திங்கட்கிழமை)
அமாவாசை பின்னிரவு 2.52 மணிவரை
பூரட்டாதி முழுவதும்
இராகுகாலம் 7.31-9.21 மணிவரை
சுபநேரம் 12.21- 1.51 மணிவரை
அமாவாசை விரதம்

| | |
|---|---|
| மேடம் | மனமகிழ்ச்சி, காரியநன்மை, தெய்வசிந்தை, விருந்துபசாரம். |
| இடபம் | பெரியோரால் மதிக்கப்படுதல், தொழில் நன்மை. பிறர் உதவி, போசன சுகம். |
| மிதுனம் | சரீரப் பிரயாசை, பிரயாணம், கட்டுப்பாடு, எதிர்பாராத செலவு. |
| கடகம் | மனக்கவலை, ஆரோக்கியக் குறைவு, போசனசுகம், காரிய தாமதம். |
| சிங்கம் | குடும்ப நன்மை, மனோதைரியம், முயற்சி கைகூடும். தனலாபம். |
| கன்னி | செய்தொழில் விருத்தி, காரிய அனுகூலம், தன்னம்பிக்கை, போசனசுகம். |
| துலாம் | அஜீரணரோகம், குடும்பக் கவலை, பூர்வபுண்ணிய கருமம், தனவிரயம். |
| விருச்சிகம் | மாதா சுகம், மனச்சஞ்சலம், தொழில் சிந்தை, நண்பர்கள் சந்திப்பு. |
| தனுசு | சகோதரர் வழி நன்மை, கீர்த்தி, ஆரோக்கியநிலை, போசனசுகம். |
| மகரம் | மனோ சங்கடம், போசனசுகக் குறைவு, முயற்சி தாமதம், தனவிரயம். |
| கும்பம் | வெகுமானம், நல்லமுயற்சி, நண்பர்கள் சந்திப்பு, போசன நன்மை. |
| மீனம் | காரிய அலைச்சல், மனஸ்தாபம், சுபசெலவு, தெய்வ சிந்தை. |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 70 | 80 |
| உருளைக்கிழங்கு | 50 | 60 | 50 |
| பச்சைமிளகாய் | 100 | 110 | 100 |
| தக்காளி | 40 | 50 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 40 | 30 |
| கோவா | 40 | 50 | 50 |
| கரட் | 80 | 90 | 80 |
| பூசணி | 30 | 40 | 40 |
| புடோல் | 60 | 80 | 50 |
| வாழைக்காய் | 40 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 40 | 50 | 50 |
| பெரிய வெங்காயம் | 60 | 70 | 60 |
| பாகற்காய் | 70 | 80 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 70 | 50 |
| கரணைக் கிழங்கு | 30 | 40 | 50 |
| பயிற்றங்காய் | 100 | 110 | 80 |
| லீக்ஸ் | 60 | 70 | 80 |
| பீற்றூட் | 50 | 60 | 60 |
| கறிமிளகாய் | 100 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 350 | 400 | 240 |
| போஞ்சி | 80 | 90 | 80 |
| கத்தரிதம்புள்ள | 40 | 50 | 60 |
| கீரை - 1 பிடி | 25 | 25 | 25 |
| தேசிக்காய் | 80 | 80 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 30 |



இளங்கவிஞர் வேல் சாரங்கனின் "மொழிபெயர்க்கப்பட்ட மௌனம்" கவிதை நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் சனிக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி சுப்பிரமணியம் மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் நூல் ஆசிரியர் மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும், யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறை உதவி விரிவுரையாளர் கு.குருபரன் வரவேற்புரை நிகழ்த்துவதையும், யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் பிரதம விருந்தினர் உரை நிகழ்த்துவதையும், நூல் ஆய்வுரையினை யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா நிகழ்த்துவதையும், நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

## அதிபர்களுக்கான கூட்டம்

(கோப்பாய்)

கோப்பாய் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான விசேட கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் அனைத்து அதிபர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.சித்திரவடிவேல் தெரிவித்துள்ளார். (6-4-79)

## வன்னிப் பகுதிக்கான தொலைபேசி சேவை

(வடமராட்சி)

கிளிநொச்சிப் பகுதிக்கு முழுமையான தொலைபேசி வசதிகள் விரைவில் கிடைக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான ஏற்பாடுகளை ரெலிகொம் நிறுவனம் மேற்கொண்டு வருவதாகவும் விரைவில் வன்னிப் பகுதி அனைத்துக்குமான தொலைபேசி வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (6-4-10)




## உணவு பதனிடல், அழகுக்கலை பயிற்சிகளுக்கு விண்ணப்பம்கோரல்

தென்மராட்சி கல்வி வலய முறைசாரா கல்விப் பிரிவினரின் ஏற்பாட்டில் பாடசாலை கல்வியை முடித்துக் கொண்ட யுவதிகளிடமிருந்து உணவு பதனிடல் மற்றும் அழகுக்கலைப் பயிற்சிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இப்பயிற்சி 6 மாத காலப் பயிற்சி நெறியாக கைதடி முத்துக்.குமாரசுவாமி வித்தியாலயத்தில் நடத்தப்படவுள்ளது.

விண்ணப்பிக்கவிரும்புவோர் மேற்படி பாடசாலை அதிபரிடம் விபரங்களைப் பெற்று விண்ணப்பிக்குமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (6-4-29)

## கொட்டப்படும் கழிவுகளால் சுகாதாரச் சீர்கேடு

(பொன்னாலை)

யாழ்- காக்கைதீவுப் பகுதியில் கழிவுப் பொருட்கள் கொட்டப்படுவதால் அப்பகுதியில் கடும் துர்நாற்றம் வீசுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நகரத்தில் சேகரிக்கப்படும் உணவுக் கழிவுகள், இறைச்சிக்காக வெட்டப்பட்டு வரும் கால்நடைகளின் எச்சக்கழிவுகள் மற்றும் இதரப் பொருட்களே இவ்வாறு வீசப்பட்டு வருவதாகவும், இதனால் அப்பகுதியில் கடும் துர்நாற்றம் வீசுவதோடு, சுகாதாரச் சீர்கேடு நிலவுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

அருகில் குடியிருப்புக்கள் இருப்பதால் தொற்றுநோய்கள் ஏற்படும் அபாயங்கள் உள்ளதோடு, காகம் மற்றும் நாய்கள் என்பன அக்கழிவுகளை எடுத்து வந்து குடியிருப்பு நிலங்களில் போடும் நிலை காணப்படுவதாகவும் பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (2-49)

# கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட இருவருக்கு அபராதம் விதிப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பகுதியில் சட்ட விரோதமாக கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட இரண்டு பேருக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தால் 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சாவகச்சேரிப் பொலிஸார் தாக்கல் செய்த வழக்கில் கடந்த வாரம் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது கெருடாவிலைச் சேர்ந்த பெண் ஒருவர் கசிப்பு மற்றும் கசிப்பு உற்பத்திக்கு தேவையான கோடா மற்றும் உபகரணங்கள் வைத்திருந்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதில் குறித்த நபரிடம் கசிப்பு வைத்திருந்ததற்கு 50 ஆயிரம் ரூபாவும் 3 மாதகால கடூழிய சிறைத்தண்டணையும் கோடா வைத்திருந்ததற்கு 50 ஆயிரம் ரூபாவும் 3 மாத கடூழியசிறைத் தண்டனையும் கசிப்பு உற்பத்திக்கான உபகரணங்கள் வைத்திருந்ததற்கு 50 ஆயிரம் ரூபாவும் 6 மாதகால கடூழிய சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

இதேவேளை மீசாலையைச் சேர்ந்த ஒருவருக்கும் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டதற்காக குற்றச்சாட்டப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டது.

இதில் குறித்த நபரிடம் கசிப்பு வைத்திருந்ததற்கு75 ஆயிரம் ரூபாவும் 6 மாத கால கடூழிய சிறைத்தண்டணையும் கோடா வைத்திருந்ததற்கு 75 ஆயிரம் ரூபாவும் 9 மாத கடூழிய சிறைத்தண்டணையும் வழங்கப்பட்டது.

மேலும் குறித்த நபருக்கு ஏற்கனவே இத்தகைய குற்றச்சாட்டுக்காக நீதிமன்றத்தால் ஒரு இலட்சத்து 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதாக நீதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வந்ததையடுத்து குறித்த குற்றச்சாட்டுக்காக மேலதிகமாக 50 ஆயிரம் ரூபாவும் 3 மாதகால் கடூழிய சிறைத்தண்டனையும் நீதிபதியால் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேலும் அபராதம் செலுத்தாவிடின் ஒரு வருட கால சிறைத்தண்டணையை அனுபவிக்க வேண்டும் எனவும் தீர்ப்பளிக்கப்பட்டது. (4-29)

# 9 ஆம் திகதி தீவக பகுதிகளுக்கான அபிவிருத்திகள் தொடங்கும் நாள்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதி

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் பொதுத் தேர்தல் ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி நடந்து முடிந்த மறு தினமான 9 ஆம் திகதியை தீவகப் பகுதிகளுக்கான அபிவிருத்தி மேம்பாட்டுத் திட்டங்கள் தொடங்கும் நாள் எனக் கொள்ளும்படியும் ஈ.பி.டி.பி.யினராகிய எமக்கு மக்கள் அதிக அரசியல் பலத்தை தருவார்கள் என்ற நம்பிக்கை தனக்கு இருப்பதாகவும் எனவே இச்சந்தர்ப்பத்தை தவறவிடக் கூடாது என்றும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை புங்குடுதீவு மற்றும் வேலணைப் பகுதிகளில் அமைந்துள்ள ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் அலுவலகங்களில் வைத்து பொதுமக்களைச் சந்தித்து கலந்துரையாடிய போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் கருத்துத் தெரிவிக்கையில், எமது மக்களுடன் நாளாந்தம் தங்கியிருந்து மக்களுக்காக சேவை செய்பவர்களையே தங்களது பிரதிநிதிகளாக தெரிவு செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொண்டதுடன் தேர்தல் காலங்களில் மட்டும் வந்து வாக்குகளை அப கரித்துக் கொண்டு அதன் பின்னர் மக்களைத் திரும்பியும் பாராத நபர்களை மக்கள் கடந்த காலங்களில் இனங்கண்டு கொண்டிருப்பார்கள் எனத் தான் நம்புவதாகவும் தெரிவித்தார். (2-6)

# கோப்பாய் பகுதி கிராமங்களுக்கான தொலைபேசி இணைப்புச் சேவை

(வேலணை)

கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கிராமங்களுக்கு சிறிலங்கா ரெலிகொம் நிறுவனத்தினால் விரைவில் வயர் தொடுகை மூலமான தொலைபேசி இணைப்புச் சேவையை வழங்கவுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

இதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அஞ்சல் பரிவர்த்தனை நிலையத்துக்குரிய இயந்திரங்கள் கோப்பாய் சந்தியில் உள்ள காணியில் பொருத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இவ்வேலைகள் முடிவடைந்ததும் கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பல கிராமங்களுக்கு இத் தொலைபேசி இணைப்புச் சேவை வழங்கப்பட்டுவுள்ளதாகவும் இதனால் கிராம மக்கள் பயன்பெறமுடியுமெனவும் ரெலிக்கொம் நிறுவனப் பணியாளர்கள் தெரிவித்துள்ளனர். (6-4-22)

## வானியல் பாசறை

(கோப்பாய்)

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் வானியல் பாசறை நிகழ்வு இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இதில் தரம் 5 மற்றும் தரம் 9 மாணவர்கள் பங்குபற்றவுள்ளதுடன் வளவாளராக யாழ். கல்வி வலய ஆசிரிய வள நிலைய முகாமையாளர் எஸ்.இரட்ணசிங்கம் கலந்து கொள்ளவுள்ளார். (6-4-79)

## நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். உயர் தொழில்நுட்பவியில் நிறுவனத்தின் HNDA 2 ஆம் வருட பகல் நேர மாண வர்களின் நுட்பம் -2 நூல் வெளியீட்டு வைபவம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் பிரதான மண்டபத்தில் இ. வசீகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நிறுவனத்தின் பணிப்பாளர் டாக்டர் எஸ்.ஜெ.எம். சகாயன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (6-4)

## கஞ்சா செடியை பயிரிட்ட மூன்று நபர்கள் கைது

(சாவகச்சேரி)

கொடிகாமம் பலாலி தெற்கில் பயிர்களுக்கிடையில் பயிரிடப்பட்டிருந்த 85 கிலோ கிராம் நிறையுடைய கஞ்சா செடிகளை பொலிஸார் கைப்பற்றியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக பயிர்ச் செய்கையில் ஈடுபட்டிருந்த மூன்று பேர் கைதுசெய்யப்பட்டு சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டதாகவும் குறித்த நபர்களை எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிபதி உதரவிட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. (6-429)

## கோப்பாய் கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி முடிவுகள்

(கோப்பாய்)

கோப்பாய் கோட்ட பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் முதலாம் இடத்தை அத்தியார் இந்துக் கல்லூரியும் இரண்டாம் இடத்தை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியும் மூன்றாம் இடத்தை புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியும் பெற்றுக் கொண டதாக தெரிவிக்கப்படுகிறது. (6-4-79)

## கட்டடத்திறப்பு விழா

(வடமராட்சி)

வடமராட்சி கல்வி வலயத்தின் புதிய பகுதிக் கட்டடத் திறப்பு விழா நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை கோட்டக்கல்வி அலுவலக மேல்மாடியில் நிர்மாணிக்கப்பட்ட இக் கட்டடத்தை வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி கலந்துகொண்டு திறந்து வைக்கவுள்ளார். இந்நிகழ்வில் அனைத்துப் பாடசாலை அதிபர்களையும் ஆசிரியர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (6-4-10)




சாவகச்சேரி புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தின் பாவனைக்கென டென்மார்க்கைச் சேர்ந்த சண்முகசுந்தரம் குடும்பத்தினரால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட பாண்ட் வாத்திய கருவிகள் சம்பிரதாயபூர்வமாக மாணவர்களால் பாவனைக்குட்படுத்தப்பட்டபோது நிலையத்தலைவர் எஸ்.இராஜரட்ணம் மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் நிலைய ஸ்தாபகர் மகாலிங்கம், முன்னாள் செயலர் ம.விவேகானந்தன், ஓய்வுபெற்ற உப அதிபர் திருமதி ரு.இராஜரட்ணம், திருமதி மகாலிங்கம் ஆகியோரையும் மாணவர்கள் பாண்ட்வாத்தியம் இசைப்பதனையும் காணலாம். (படங்கள்:- சாவகச்சேரி நிருபர்)

# லசந்தவின் கொலை தொடர்பில் கைதான இராணுவ வீரர்கள் விடுவிப்பு

(கொழும்பு)

சிரேஸ்ட ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் கொலை தொடர்பில் கைது செய்யப்பட்டிருந்த 6இராணுவ வீரர்களில் 5பேர் பொலிஸ் காவலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர்.

குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்க முடியாத நிலையில் மீண்டும் அவர்கள் தமது இராணுவமுகாம்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மற்றும் ஒரு இராணுவ வீரரும் நுவரெலியாவில் வாகன திருத்தும் நிலையத்தை கொண்டுள்ள ஜேசுதாசன் என்பவரும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லசந்த விக்கிரமதுங்க கொலை செய்யப்பட நாளில் அவருடன் தொடர்பு கொள்ளப்பட்ட தொலைபேசி சிம் அட்டை, ஜேசுதாசனின் தொலைந்து போன அடையாள அட்டையின் மூலமே கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் அத்துடன் ஜேசுதாசனுக்கும் தடுத்துவைக்கப்பட்டுள்ள இராணுவ வீரருக்கும் இடையில் நட்பு இருந்தமையும் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

# அடிப்படை வசதிகளற்ற நிலையில் பெரியகுளம் பாடசாலை மாணவர்கள்

(வடமராட்சி)

கனகராயன்குளம் பகுதியில் உள்ள பெரியகுளம் பாடசாலை மாணவர்கள் அடிப்படை வசதிகள் இன்றி பெரும் சிரமத்தின் மத்தியில் கல்வி கற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இப்பாடசாலைக்கு மாணவர்கள் வரவும் மிகக்குறைவாகக் காணப்படுவதாகவும் பாடசாலை கட்டடங்களின் கூரைப்பகுதி சேதமடைந்திருப்பதாகவும் அதனைத் திருத்தியமைக்காததால் மாணவர்கள் பாடசாலைக் கட்டடத்திற்கருகில் சிறிய தற்காலிக கூடாரங்களை அமைத்து நிலத்தில் அமர்ந்திருந்தே கல்வி கற்று வருவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது. மேலும் ஆசிரியர்களும் மேசை, கதிரை, கரும்பலகை இல்லாமல் சிரமப்பட்டே மாண வர்களுக்கு கல்வி கற்பிப்பதாகவும் தெரிவிக் கப்படுகிறது. (2-4-10)

# தீக்கிரையாக்கப்பட்ட வர்த்தக நிலையத்திற்கு செலிங்கோ நிறுவனம் காப்பீடு வழங்கியது

கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு 1.30 மணியளவில் திருநெல்வேலி சந்தைப் பகுதியில் தீக்கிரையாக்கப்பட்ட தேவி களஞ்சியம் பலசரக்குக் கடைக்கு செலிங்கோ காப்புறுதி நிறுவனம் 20 இலட்சம் ரூபா காப்பீடு வழங்கியுள்ளது.

தீக்கிரையாக்கப்பட்ட குறித்த வர்த்தக நிலையத்திறக்கு அன்றையதினமே குறித்த நேரத்துக்குள் சென்ற செலிங்கோ ஒன்த ஸ்பொர்ட் காப்புறுதி நிறுவனம் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொர்ண்டது.

இதற்கமைய தேவி களஞ்சியத்திற்கான காப்பீட்டுத் தொகையை அதன் உரிமையாளர் சற்குணராசா தவராசாவிடம் பிராந்திய முகாமையாளர் எஸ்.திலகேஸ்வரன் கையளித்துள்ளார். (2-7)

# தேர்தல் கடமைகளில் ஈடுபடுவதற்கு 50 ஆயிரம் ஆசிரியர்கள் விண்ணப்பம்

## கல்வியமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

நாடாளுமன்றத் தேர்தல் கடமைகளில் ஈடுபடுவதற்காக அரசாங்கப் பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் 50 ஆயிரம் ஆசிரியர்கள் விண்ணப்பித்துள்ளதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் கடமைகளுக்காக இரண்டு இலட்சம் அரசாங்க ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இந்தக் கடமையில் ஈடுபடுவதற்காக விண்ணப்பித்தவர்களில் பெரும்பாலானோர் ஆசிரியர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (2-6)

# பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்ட திருக்கேதீஸ்வரம் மஹாசிவராத்திரி விழா

(கொழும்பு)

மன்னார் திருக்கேதீச்சர சிவாலயத்தில் மஹாசிவராத்திரி விழா நிகழ்வுகள் நேற்று முன்தினம் இடம்பெற்றன.

வடபகுதியில் முன்னெடுக்கப்பட்டு வந்த போர் நடவடிக்கைகள் முடிவுற்ற பின்னர் முதன்முறையாக நடைபெறும் இவ்விழாவில் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான பக்த அடியார்கள் கலந்து கொண்டனர்.

மக்களுக்குத் தேவையான சகல அடிப்படை வசதிகளும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. அடியார்கள் தங்கிச் செல்வதற் கான தங்குமிட வசதிகள், கழிவறை வசதிகள், உணவு விடுதிகள் , நீர் மற்றும் மின்சார வசதிகள் என்பனவும் போதிய அளவு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், கொழும்பு ஆகிய இடங்களில் இருந்தும் பெருமளவான மக்கள் திருக்கேதீச்சர திருத்தலத்திற்கு வருகைத தந்திருந்தனர். அருள்மிகு திருக்கேதீச்சர திருத்தலத்தில் சிவராத்திரி தினத்தை முன்னிட்டு அப்பகுதியில் சுமார் 27 கோடி ரூபா செலவில் புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

மேற்படி அபிவிருத்தி வேலைகளில் அரசாங்கமும், சமூக சேவைகள் அமைச்சும், இந்து கலாசார திணைக்களமும், முழுமையாக ஈடுபட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை சிவராத்திரி நிகழ்வுகளுக்கென விசேடமாக இந்தியாவில் இருந்து வருகை தந்திருக்கும் இசைக்கலைஞர்களின் இன்னிசை நிகழ்வுகளும் இடம்பெற்றன.(2-6)

தமிழ் தேசியத்திற்கான மக்கள் முன்னணி

மக்களெல்லாம்...
மக்களெல்லாம்...
தமிழ் தேசியத்தின் பக்கம்...
மக்கள் படை என்றைக்கும்.
தமிழ் தேசியத்திற்கான
முன்னணியுடனே இருக்கும்
என்பதை உணர்த்திட
வாக்களிப்போம்.



உண்மையின் வடிவம்
உறுதியின் நிலையம்.
தமிழ் தேசியமே... தனது
தணியாத தாகமாக
உறுதியோடு பயணிக்கும்
உங்கள் நம்பிக்கை தலைவன்

திரு.கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

2 X

திரு.கஜேந்திரகுமார் பொன்னம்பலம்
அவர்களை வெற்றிவாகை சூடவைப்போம்.


அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்



X

(605) அரசறிவியல் கல்லூரி, யாழ்ப்பாணம்.

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொள்கை விளக்கம்



இரா. சம்பந்தன்

(நேற்றைய தொடர்ச்சி...)

### *தமிழீழ விடுதலைப்புலிகளுடனான பேச்சுவார்த்தை*

எரிந்துகொண்டிருக்கின்ற தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு எந்த முன்னேற்றமும் ஏற்படாத அதே வேளையில் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது ஆயுதப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருந்தனர். ஆரம்பத்தில் பல்வேறுபட்ட ஆயுதமேந்திய இயக்கங்கள் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட பொழுதும் கூட 1987 இலிருந்து தமிழீழ விடுதலைப்புலிகளே தமிழ்மக்களின் தனிநாட்டுக்காகப் போராடும் ஒரேயொரு ஆயுதமேந்திய இயக்கமாகப் பரிணமித்தது. ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தின. 2002 ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் ஒரு யுத்த நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தானதோடு பின்னர் ஒஸ்லோ நகரில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் பிரகாரம் ஒஸ்லோ உடன்பாடு என்ற பெயரில் இரு தரப்பினரும் சில அடிப்படைக் கொள்கை விதிகளை ஏற்றுக் கொண்டனர். அது பின்வருமாறு:

''உள்ளக சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டினடிப்படையில் தமிழ் பேசும் மக்களின் வரலாற்று ரீதியிலமைந்த வாழ்விடப் பிரதேசங்களில் சமஷ்டிக் கட்டமைப்பிலான அரசியல் தீர்வொன்றை ஐக்கிய இலங்கைக்குள் கண்டெடுப்பதற்கும் பரிசீலனை செய்யப்படுதல் வேண்டும்.''

### *இராணுவத் தாக்குதல்களும் அதன் பின் விளைவுகளும்*

இந்தப் போர் நிறுத்தம் கடைப்பிடிக்கப்படாமல் அரசாங்க இராணுவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் போராட்டம் திரும்பவும் ஆரம்பமாகி, 2009 மே மாதம் 19ம் திகதியோடு அனைத்து இராணுவ மோதல்களும் முடிவுக்கு வந்தன. இந்த 30 வருட போராட்ட காலம் தமிழ் தாயகத்தையும் தமிழ் மக்களையும் முற்று முழுதாக சூறையாடி ஏதுமற்ற ஏதேலிகளாக்கியுள்ளது.

பத்து இலட்சம் தமிழ் மக்கள் பாதுகாப்புத் தேடி வேறு நாடுகளுக்கு புலம் பெயர்ந்தும், இன்னொரு ஐந்து இலட்சம் மக்கள் நாட்டிற்குள்ளேயே இடம்பெயர்ந்தவர்களாகவுமிருக்கிறார்கள். இந்தப் போராட்ட காலத்தில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இராணுவத் தாக்குதலில் கடைசிக் கட்டங்களில் முப்பதாயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்று சர்வதேச நிறுவனங்களினாலே மதிப்பிடப்பட்டுள்ளது. வேறு பலர் அங்கங்களை இழந்தும் பாரதூரமான காயங்களிற்குள்ளாகியும் மனஉளைச்சல்களிற்குள்ளாகியும் துன்பப்படுகின்றார்கள். இதைவிட வன்னியில் மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் வீடு வாசல் மற்றும் வாழ்வாதாரங்களை இழந்தும் பின்னர் எல்லா முறைமைகளையும் மீறி தடுப்பு முகாம்களில் கைதிகளாக அடைக்கப்பட்டுமிருந்தனர். இவர்களில் பெரும்பாலோனோர் இன்னமும் இந்த முகாம்களிலே கைதி களாக வாழ்கின்றனர். பதினோரா யிரத்திற்கும் மேற்பட்டவர்கள் விடுதலைப் புலிகளோடு தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் வேறாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர். ''விடுவிக்கப்பட்ட மற்றவர்கள் எந்த வித நிவாரணமோ வாழ்வாதாரமோ இன்றி தங்களைத் தாங்களே காத்துக் கொள்ளுமாறு விடப்பட்டுள்ளனர். தங்களுக்கு என்று சொல்லிப் போக வீடொன்று கூட அவர்களுக்குக் கிடையாது. இந்த மக்களுடைய திட்டவட்ட மீள்குடியேற்றமும் புனர்வாழ் வும் எமது தாயகத்தை மீளக்கட்டியெழுப்புவதும் இந்த மணித்துளியின் உடனடித் தேவையாக உள்ளது. தமிழ் மக்களுடைய வணக்கஸ்தலங்களான இந்து கிறிஸ்தவ ஆலயங்கள் பல அசுத்தப்படுத்தப்பட்டு இடித்தழிக்கப்பட்டிருக்கின்றன. அரசாங்கத்தின் மிக உயர் நிலைகளுக்கு இது சம்பந்தமான முறைப்பாடுகள் செய்யப்பட்டும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.



## பொதுத் தேர்தல்-2010

### *எமது மக்கள் சுரண்டப்பட்டு எமது நிலம் சூறையாடப்படுகின்றது*

''உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் குறிப்பாக யாழ் குடாநாட்டிலும் சம்பூர் உள்ளிட்ட மூதூர் கிழக்கிலும் ஏராளமான நிலப்பரப்பு பலவருடங்களாக இராணுவக் கட்டுப்பாட்டிற்குட்படுத்தப்பட்டு அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த பூர்வீகத் தமிழ் மக்களுக்கு தங்களுக்குச் சொந்தமான பிரத்தியேக வீடுகளில் வாழ்வதற்கும் தங்களது சொந்தக் காணிகளில் பயிர் செய்வதற்கும் மீன்பிடித்தல் மற்றும் வேறு பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் தடைவிதிக்கப்பட்டிருக்கின்றது. தொழில்துறை, சுற்றுலாத்துறை வடகிழக்கின் அபிவிருத்தி என்ற போர்வையில் தமிழ் பிரதேசங்களின் குடிசனப் பரம்பலை மாற்றி சிங்களக் குடியேற்றங்களாக ஆக்குவதற்கு பல முன்னெடுப்புகள் தீவிரமாக நடைபெறுகின்றன. கரையோரப் பகுதியில் மீன் பிடித்தலுக்கான உரிமைகள் மட்டுப்படுத்தப்பட்டு தமிழ் பேசும் மக்களுடைய வாழ்வாதாரங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. பனைவள அபிவிருத்திச்சபை அரசாங்க கட்டுப்பாட்டிற்குள் இருப்பதன் காரணமாக தங்கள் வாழ்வுக்கு பனைவளத்தில் தங்கியிருக்கின்ற மக்கள் மிக மோசமாகச் சுரண்டப்படுகிறார்கள். தமிழ் மக்கள் சுதந்திரமாக நடமாடும் உரிமை தொடர்ந்தும் மட்டுப்படுத்தப்பட்டு அவர்களுடைய சமத்துவத்திற்கான உரிமை பலவழிகளில் மீறப்படுகின்றது. பல வருடங்களிற்கு முன்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட பலர் இன்னமும் குற்றச்சாட்டின்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். எமது மக்களை பெரும்பாலானோரது வாழ்க்கை நிலைகள் பரிதாபமானதாகக் காணப்படுகின்றது.

### *2010 ஜனாதிபதித் தேர்தல்*

ஜனவரி ஜனாதிபதித் தேர்தலிலே எமது மக்களுடைய அவல நிலையைக் குறித்தும் எமது அரசியல் உரிமைகளைப் பரிசீலிப்பதிலும் அரசாங்கத்திற்கு இருந்த அக்கறையற்ற போக்கை எமது மக்களுக்கு விளக்கிச் சொன்னோம். சர்வகட்சி பிரதிநிதி குழு ஒன்று அமைக்கப்பட்டபொழுது கூட வடக்குக் கிழக்கில் இருந்து தெரிவான 23 தமிழ்ப் பிரதிநிதிகளில் 22 பாராளுமன்ற பிரதிநிதிகளைக் கொண்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு இக் கூட்டங்களுக்கு அழைக்கப்படவில்லை. ஜனாதிபதியால் உருவாக்கப்பட்ட நிபுணர்கள் குழுவின் பெரும்பான்மையினரால் கொடுக்கப்பட்ட சிபார்சுகளும் கூட கருத்திலெடுக்கப்படவில்லை. இந்தக் காரணங்களுக் காகவும் ஏனைய பல காரணங்களுக்காகவும் ஜனாதிபதி ராஜபக்ஷ அவர்கள் ஜனாதிபதியாக இருப்பதற்கு இரண்டாவது தவணைக்காக கேட்ட மக்களாணையை நிராகரிக்கும்படி தமிழ் தேசியக் கூட்டமைப்பு மக்களைக் கேட்டுக்கொண்டது. தமிழ் மக்கள் மிகத் தெளிவாகவும் சந்தேகமற்ற முறையிலும் ஜனாபதித் தேர்தலில் தம்து தீர்ப்பைத் தெரிவித்திருந்தார்கள். ஒரு புதிய மக்களாணைக்கான ஜனாதிபதியின் கோரிக்கைக்கெதிராக மிகப் பாரியளவில் தமிழ் மக்கள் வாக்களித்ததன்மூலம் முதலாவது தவணையின் பொழுது ஜனாதிபதியின் ஆட்சிமுறையை தாங்கள் விரும்பவில்லை என்பதை மிகத் தெளிவாக வெளிக்காட்டியிருக்கின்றார்கள். அதைவிட முக்கியமானதாக தமக்கு வேண்டும் என்பதை மிகத் தெளிவாக வெளிப்படுத்தியிருக்கின்றார்கள்.

### *அரசியல் தீர்வு தொடர்பான எமது நிலைப்பாடு*


இந்த நாட்டைப் பூர்விகமாகக் கொண்ட இரு இனங்கள் பகிரப்பட்ட இறையாண்மையூடாக அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிக முக்கியமானதென சில குறிப்பான அரசியல் சாசன விதிமுறைகளும் கொள்கைகளும் அவசியம் என்று கருதுகிறது. கீழே தரப்படும் அதிகாரப் பகிரலுக்கான முக்கிய அம்சங்கள் நீடிய சமாதானத்துக்கும் இலங்கையின் அனைத்து மக்களின் மேம்பாட்டிற்கும் அபிவிருத்திக்கும் மிக அடிப்படையானவை:

- தமிழ் மக்கள் ஓர் தனித்துவமான தேசிய இனம். அவர்கள் இலங்கைத் தீவில், சிங்கள மக்களுடனும், ஏனையோருடனும், பாரம்பரியமாக வாழ்ந்து வருகின்றார்கள்.
- தொடர்ச்சியான வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இலங்கை தமிழ் பேசும் மக்களின் வரலாற்று பூர்வமான வாழ்விடமாகும்.
- தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள்
- அதிகாரப் பங்கீடானது இணைந்த வடக்கு - கிழக்கு மாகாணத்தில், சமஷ்டி கட்டமைப்பின் அடிப்படையில் நிறுவப்படவேண்டும். இது தமிழ் பேசும் முஸ்லீம் மக்களுக்கும் ஏற்புடையதாக இருக்க வேண்டும்.
- அதிகாரப் பங்கீடானது நிலம், சட்டம், ஒழுங்கு, கல்வி, சுகாதாரம் உட்பட சமூக, பொருளாதார அபிவிருத்தி, வளங்கள் மற்றும் நிதி அதிகாரங்களையும் கொண்டதாக இருக்க வேண்டும்.
- புதிய தொழிற்துறைகளை உருவாக்கவும் மற்றும் எமது இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை உருவாக்கவும், வடக்கு - கிழக்கில் நேரடியான வெளிநாட்டு முதலீடுகளை கொண்டு வர ஏற்பாடுகள் செய்யப்படும்.
- பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற முடியாத மாணவர்களுக்கு அவர்களுக்குரித்தான அவசியமான துறைகளில் உயர் கல்வி கற்பதற்கான மாற்று ஏற்பாடுகளை செய்தல்.

### *எமது மக்களின் உடனடித் தேவைகள்*

எமது மக்களிற்கு நிலைத்து நிற்கக் கூடியதும் சமாதானமுமான வாழ்வொன்றிற்காக செயற்படுகின்ற அதேவேளையில் அவர்களுடைய உடனடியானதும், தற்போது நிலவக் கூடியதுமான முக்கிய பிரச்சினைகளை கையாழ்வதிலும் விரைந்து செயற்படுவோம். இப்பிரச்சினைகள் தொடர்பாக பின்வரும் விடயங்களிற்கு முக்கியத்துவம் கொடுப்போம்.

வடக்கு - கிழக்கில் இருந்து இராணுவமும், இராணுவ தளபாடங்களும் அகற்றப்படுதல் மற்றும் உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றுதல் மூலமும் 1983ஆம் ஆண்டிற்கு முந்திய நிலைக்கு எமது பிரதேசத்தை இட்டுச் செல்லக்கூடிய அர்த்தமுள்ள இரா ணுவ விலக்கல் அவசியமானது.



சுரேஸ் பிரேமச்சந்திரன்

- போரினால் இடம்பெயர்க்கப்பட்ட தமிழ் மக்கள் விரைவாக தமக்குரிய சொந்த இடங்களில் வீடுகள் வழங்கப்பட்டும், வாழ்வாதாரங்கள் மீளமைக்கப்பட்டும், அவர்களது கௌரவம் மதிக்கப்படுகின்றதுமான வகையில் மீள்குடியேற்றப் படவேண்டும்.
- இராணுவ நடவடிக்கைகள் காரணமாக ஏற்பட்ட உயிரிழப்புக்களுக்கும் உடல் ஊனங்களுக்கும், சொத்திழப்புக்களுக்கும் போதிய இழப்பீடு வழங்கப்பட வேண்டும்.
- தேசிய நல்லிணக்கத்திற்கான முதற்படியாக எந்தவித குற்றமும் சுமத்தப்படாத, தடுப்புக்காவலில் உள்ள நபர்கள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டுமென்பதுடன், ஏனையவர்களுக்கு பொது மன்னிப்பு அளித்து விடுவிக்கப்பட வேண்டும்.
- கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக நாட்டை விட்டு வெளியேறியவர்கள் மீண்டும் தமது இல்லங்களுக்குவர அனுமதிக்கப்பட வேண்டுமென்பதுடன், அதற்கேற்ற சூழ்நிலை உருவாக்கவும் வேண்டும்.

(12ஆம் பக்கம் பார்க்க...)

# சுகாதார சேவைகள் தொடர்பான முறைப்பாடுகளை பெற புதியபிரிவு

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

சுகாதார சேவைகள் தொடர்பாக பொது மக்களின் முறைப்பாடுகளை பெற்றுக் கொள்வதற்காக புதிய பிரிவொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கென விசேட தொலைபேசி இலக்கமொன்றும் தரப்படும் என்று சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் நிகால் ஜெயதிலக தெரிவித்தார்.

மேலும் விசேட பிரிவுக்கு கிடைக்கும் முறைப்பாடுகளை ஆவணப்படுத்தி விசாரணை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. எனினும் மருத்துவ சிகிச்சைகளின் போது ஏற் படும் நெருக்கடிகளை தவிர்க்கும் முகமாக நோயாளர்களுக்கு நேரங்களை ஒதுக்கி கொடுக்கும் திட்டமொன்றும் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார். (2-4)

# ஆங்கில மொழி தொடர்பான மேம்படுத்தல் செயற்திட்டம்

## மற்றுமொரு கட்டம் இன்று ஆரம்பம்

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அறிவுறுத்தலுக்கமைய தயாரிக்கப்பட்ட ஆங்கிலமொழி தொடர்பான மேம்படுத்துவதற்கான செயற்திட்டத்தின் மற்றொரு கட்டம் இன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு மற்றும் கிராமியப் பாடசாலைகளின் ஆங்கில ஆசிரியர்களை இந்தியாவின் ஐதராபாத்தில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களைக் கொண்டு பயிற்றுவிக்கும் செயற்திட்டமே ஆரம்பிக்கவுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

நாட்டில் துரித அபிவிருத்தியை மேற்கொள்வதற்காக இலங்கைப் பிரஜைகளை தயார்ப்படுத்தவதே ஜனாதிபதியின் அடுத்த முக்கியத்துவம் மிக்க சவாலாகும் என ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

மேலும் இந்த ஆங்கிலப் பயிற்சி செயற்திட்டத்தை ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க கொழும்பு றோயல் கல்லூரியில் இன்று ஆரம்பித்துவைக்கவுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது. (2-4)


STUDY IN THE UK

Anglia Ruskin University
Cambridge & Chelmsford




Admission for September 2010 Intake

Spot Admissions

by University Representative Mr. Bernie Ryder on

17th March - at North Lanka IIT,
No. 113, Laxan Plaza, Navalar Road, Jaffna.
10.00 am to 12 Noon

We help you with:

- Course Selection and Career Advice
- Application Process/Visa Documentation
- Airport Pick-up/Part-time jobs
- Finding Accommodation

To book an appointment please call us on 2 555 243

KMS offers you Two months free IELTS preparation class

KMS KNOWLEDGE MANAGEMENT SYSTEMS
LEADING EDUCATIONAL CONSULTANT AND TRAINING PROVIDERS

329, GALLE ROAD, MEEWELLA BUILDING, FIRST FLOOR, SOUTHERN WING, COLOMBO-04.
TEL: 011 2555243, 011 2555244, 011 2555245 www.kmsworldwide.com


# ஏப்ரல் 5 வரை க.பொ.த.உயர்தரப் பரீட்சை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்

## பரீட்சை திணைக்களம் தெரிவிப்பு

(கொழும்பு)

கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கை எதிர்வரும் ஏப்ரல் 5ஆம் திகதி வரை இடம்பெறும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய தற்போது விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கை இடம்பெற்று வருவதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க தெரிவித்தார்.

பரீட்சை நடைபெறும்திகதி பின்னர் அறிவிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை அண்மையில் நடைபெற்ற க.பொ.த. (சா/த) பரீட்சை பெறுபேறுகளை தமிழ் சிங்கள புது வருடத்திற்கு முன்னர் வெளியிடவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டார். (2-4)

### யாழ்.குடாநாட்டில்

# சைக்கிள் ஓட்டுநரின் கண்காட்சியும் சைக்கிள் ஓட்டப் போட்டியும்

(யாழ்ப்பாணம்)

இளைஞர்களுக்கான நாளை அமைப்பும் றைடர் பைக்ஸ் அமைப்பும் இணைந்து யாழ்.குடாநாட்டில் சைக்கிள் ஓட்டப்போட்டியினை நாளை மறுதினம் புதன்கிழமை நடாத்தவுள்ளன.

19 வயதிற்குக் கீழ்ப்பட்ட பாடசாலை மாணவர்களிற்கு ஆண்கள் , பெண்கள் என இரு பிரிவுகளாகவும் திறந்த போட்டியில் ஆண்கள், பெண்கள் என இரு பிரிவுகளாகவும் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இதேவேளை அன்றைய தினம் இலங்கையின் சைக்கிள் இணை அமைப்பினால் , பதியப்பட்ட எலைட் குழுவிலுள்ள 125 சைக்கிள் ஓட்டுநர்களின் கண்காட்சியும் சைக்கிள் ஓட்டப்போட்டியும் யாழ். குடாநாட்டில் நடைபெறவுள் ளது.

இக் கண்காட்சி மற்றும் சைக்கிள் ஓட்டப்போட்டி மறுநாள் 18 ஆம் திகதி வவுனியா நகரிலிருந்து கண்டி வரையிலும் நடைபெறும்.

19 ஆம் திகதி கண்டியிலிருந்து கொழும்பு ஊடாக களுத்துறை வரையும் 20 ஆம் திகதி களுத்துறையிலிருந்து மாத்தறை வரையும் 21 ஆம் திகதி வரை மாத்தறையிலிருந்து தெய்குந்தற விஷ்ணு ஆலயம் ஊடாக வெலியந்த சென்று திஸ்ஸ மகாராம வரையும் நடைபெறும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

குடாநாடு ரீதியாக நடைபெறும் போட்டியில் பங்குபற்றுபவர்கள் பாடசாலை அதிபர்களின் ஊடாக விண்ணப்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தனிப்பட்ட ரீதியாகப் பங்குபற்றுபவர்கள் பெற்றோரது அனுமதிக் கடிதத்துடன் விண்ணப்பிக்க முடியும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ச-7-14)




மத்தியில் கூட்டாட்சி! மாநிலத்தில் சுயாட்சி!! மகத்தான கொள்கை!!!

அன்புள்ள துன்னாலை வாழ் உறவுகளே, கரவெட்டி, பருத்தித்துறை வாழ் நண்பர்களே,
வடமராட்சி வாழ் என் மாணவர்களே!

அன்பு, அடக்கம், அமைதி நிறைந்த என் சகோதரன்

ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன்

அவர்களை ஆதரிக்குமாறு அழைக்கின்றேன் - ஸ்ரீ சந்திரா- (ஆசிரியர்)

X
3 X

(C-4576)

# பிரான்ஸில் உயர் கல்வி பயில...

பிரான்ஸ் அட்லாண்டிக் பெருங்கடல் மற்றும் இங்கிலீஷ் கால்வாயை ஒட்டி அமைந்துள்ள ஒரு மேற்கு ஐரோப்பிய நாடாகும். கி.பி. 1789இல் நடந்த பிரெஞ்சு புரட்சிக்குப் பின் நெப்போலியனால் ஆளப் பட்ட இந்நாடு அதன் பின் இன்று வரை அசுர வளர்ச்சி கண்டுள்ளது. பிரெஞ்சு மொழியை தாய்மொழியாகக் கொண்ட இந்த நாட்டில் கிட்டத்தட்ட 3 கோடி மக்கள் வசிக்கிறார்கள்.

இதன் தலைநகரம் பாரீஸ். அறிவியல் முன்னேற்றத்திலும் அதன் புரட்சியிலும் மருத்துவ அறிவியல் ஆராச்சித் துறை களிலும் இந்த நாடு உலகிற்கு பல நன்மை களை தந்துள்ளது. ஜி8 கூட்டமைப்பு நாடுகளின் ஒரு அங்கமாகக் திகழும் பிரான்சின் பொருளாதாரம் உலகளவில் 6 ஆவது இடத்தில் இருக்கிறது. இங்கு பயன்படுத்தப்படும் நாணயம் யூரோ.

### பிரெஞ்ச் கல்வியின் சில சிறப்புகள்

பிரான்சில் கல்வி முறை உலகளவில் பெயர் பெற்றது.மேற்கு ஐரோப்பிய நாடுக ளில் பெரிய நாடான பிரான்சில் கல்வி பயின்றவர்கள் இதனை ஒரு அரிய அனுப வமாகவே கருதுகிறார்கள். இங்குள்ள கல்வி முறையைப் பற்றிப் பேசி அறிவதை விட நேரில் அனுபவங்களை சந்தித்தால் தான் அதன் நுட்பங்களை உணர முடியும் என்று கூறப்படுகிறது. பிரான்சில் ஒவ்வொரு ஆண்டும் கிட்டத்தட்ட ஒரு இலட்சத்து 14 ஆயிரம் வெளிநாட்டு மாணவர்கள் கல்வி பயில சேருகிறார்கள்.

◆ பிரான்சில் உயர் படிப்பு படிக்கும் போது பிரெஞ்சு மொழி தெரிந்தால் மட்டுமே படிக்க முடியும் என்ற பொதுவான எண்ணம் இருக் கிறது. ஆனால் இங்கு ஏற்கனவே பயின்ற இலங்கை மாணவர்கள் இதனை பொய் யாக்கி இருக்கிறார்கள். உயர் கல்வி ஆங்கில வழியிலேயே இருப்பதால் நல்ல ஆங்கில அறிவே போதுமானது.

◆ யூரோவின் மதிப்பு உலகிலேயே அதிகம் என்பதால் இங்கு படிக்க பெரும் செலவாகும் என்று நம்பப்படுகிறது. ஆனால் கல்விக்கு பிரான்சில் பெரும் நிதியுதவிகள் பிரெஞ்ச் அரசால் தரப்படுகிறது. இதனால் கல்விக்கான கட்டணங்கள் மிக அதிகம் என்று கூற முடியாது.

### பிரான்ஸ் கல்வி முறை

பிரான்சின் கல்வி முறை மிகவும் திட்ட மிடப்பட்ட மற்றும் ஒன்றிணைக்கப்பட்ட முறை யில் உள்ளது. பிரான்சின் கல்வி முறையைப் பொதுவாக 3 பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

◆ ஆரம்பப் படிப்புகள் எனப்படும் என் செய்ன் மெண்ட் பிரைமரி

◆ பாடசாலைப் படிப்புகள் எனப்படும் சென்செய்ன்ட் மெண்ட் செகண்டரி

◆ உயர் படிப்புகள் எனப்படும் என்செய்ன் மெண்ட் சுப்பீரியர்



ஆரம்பப் படிப்புக்கள் பெரும்பாலும் அரசின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. பிரெஞ்சு குடியரசு நடத்தும் பாடசாலைகளே அதிகள வில் இருக்கின்றன. இதுதவிர தனியார் பாடசாலைகளும் கத்தோலிக்கப் ப்டிப்புக் களுக்கான பாடசாலைகளும் உள்ளன.

இரண்டாம் நிலைக் கல்வி (செகண்டரி எஜுகேஷன்) படிப்புக்கள் 7 ஆண்டுகளுக் கானவை. முதல் 4 ஆண்டு படிப்புக்கள் கல்லூரிப் படிப்பு என்றும் அடுத்த 3 ஆண்டு படிப்புகள் லைசீ என்றும் அழைக்கப்படு கிறது. இந்தப் படிப்புக்களை முடித்தவர் பக்காலே என அழைக்கப்படுகிறார்கள். இந்த நிலை படிப்புக்களை முடித்தவர்கள் பிரிட்ட னின் ஏ ஸ்கூல்/ அமெரிக்காவின் ஆக்ட்/ சாட்/ அவுஸ்திரேலியாவின் மேல்நிலைப் பாடசாலை படிப்பு போன்றவற்றுக்கு இணை யாகக் கருதப்படுகிறார்கள்.

### பிரான்சின் உயர்படிப்புகள்

பிரான்சின் உயர்படிப்புக்களின் சிறப்பு என்னவென்றால் பல துறை சார்ந்த படிப் புகள் இங்கு அதிகம் உள்ளது. தவிர, மாண வர்களின் எண்ணிக்கை குறைவாகவும் அதிக அளவிலான கல்விப் பிரிவுகளின் எண்ணிக்கை மற்றும் ஆசிரியர் எண்ணிக் கை காரணமாக பிரான்சில் கல்வி பயில்வது ஒரு முழுமையான கல்வி அனு பவமாகத் திகழ்கிறது.

பிரான்சின் உயர் படிப்புக்கள் பொது வாக 2 பிரிவுகளாக உள்ளதுகிராண்ட்ஸ் இகோல்ஸ் மற் றும் பல்கலை க்கழக படிப் புக் கள் மிக வும் பெருமை க்குரிய படிப்புக ளாகக் கருதப் படு கின்றன. கிராண் ட்ஸ் இகோல்சின் கீழ் உள்ள இகோ ல் பொலிடெக்னிக் படிப்புகளே பிரான்சில் பிரசித்தி பெற்றவை. இங்கு சேருவதற்கான அனுமதியும் பெரும் போட்டியை உள்ளடக்கியது.

இகோல் பொலிடெக்னிக் பாடசாலைப் படிப்புக்கள் உலகளவில் 4ஆவது இடத்தில் உள்ளன. இங்கு ஆசிரியர்கள் நிரந்தரப் பணியில் அமர்த்தப்படுவது இல்லை.

குறிப்பிட்ட துறைக்கு குறிப்பிட்ட பாடப் பகுதியில் திறன் வாய்ந்த ஆசிரியர்கள் குறுகிய காலத்திற்கு மட்டுமே அமர்த்தப் படுவதால் சொல்லிக் கொடுக்கும் பகுதி முழுமையாக இருக்கிறது. ஆய்வுப் பணிகள் நமது நாட்டில் உள்ளதுபோல பல்கலைக் கழகங்களால் மேற்கொள்ளப்படுவதில் லை. இதற்கென்று தனியாக சி.என். ஆர். எஸ். அல்லது இன்சேர்ம் என்ற ஆய்வு நிறுவனங்கள் தனியாக உள்ளன.

பிரான்சின் கல்விக் கட்டணம் குறைவு தான். உயர்கல்விக்கு பிரெஞ்சு அரசே நிதி யுதவி செய்வதால் படிக்கும் பிரிவைப் பொறுத்து ஆண்டுக்கட்டணம் மாறுபடுகி றது.பட்ட மேற்படிப்புகளைக் கூட 3 முதல் 5 இலட்ச ரூபாய்க்குள் படித்துவிட முடிகிறது.

குறைந்த வருமானம் உள்ளவர்கள் பிரெஞ்சுச் கல்வி பயில தேர்வு செய்யப்ப டும். போது அவர்களுக்கு படிப்புக்கான கல்வி உதவித் தொகை மற்றும் குறைந்த கட்டண சலுகை போன்ற நிதியுதவிகள் தரப் படுகின்றன. அரசு சார்ந்த இன்ஜினியரிங் கல்லூரிகளில் குறைந்த கட்டணமே வசூ லிக்கப்பட்டாலும் தனியார் இன்ஜினியரிங் கல்லூரிகளில் அதிக செலவாகிறது.

பிரான்சின் சி.பி.ஜி.ஈ. எனப்படும் உயர் கல்வி நிறுவனங்கள் பல்கலைக்கழக வரை யறைகளுக்கு வெளியிலிருந்து செயல்படும் ஒரு அமைப்பாகும். ஏதாவது ஒருகுறிப்பிட்ட பிரிவில் மட்டும் இங்கு பயிற்சிகள் நடத்தப் படுகின்றன. இந்த வகைப் படிப்புக்கள் பிரான்சில் பெரிதும் மதிக்கப்படுவதோடு அதிகளவிலான அறிவியல் அறிஞர்களை யும் நிர்வாகத் தலைவர்களையும் உரு வாக்கியுள்ளது. இந்த வகைப் படிப்புக்கள் பொதுவாக 2 ஆண்டுகள் கால அளவைக் கொண்டதாக இருக்கினறன.

(மேலும் பல தகவல்கள் அடுத்த வாரம் வரும்)

## அறிவுக் கலசம்

வலம்புரி

ஆர்.யூ.பாலமுருகன்

# நீங்கள் நினைத்ததை உங்களது பிள்ளைகள் சாதிக்க வேண்டுமா?

பிறந்த குழந்தையின் மூளையின் பெரும்பாலான வளர்ச்சி 3 வயது வரை மட்டுமே. அந்தக் காலக்கட்டத்தில் பதியும் விடயங்கள் வாழ்நாள் முழுவதும் நீடிக்கிறது. இந்த உண்மை குறிப்பாக எத்தனை பெற்றோர்களுக்கு தெரியும்?

குழந்தைப் பருவம் என்று வீட்டிலேயே அடைத்துவைக்கும் நிலைதான் பெரும்பா லான படித்த பெற்றோரது செயலாகவும் இருக்கிறது. இது வருத்தத்திற்குரியது. தெரிந்தோ தெரியாமலோ குழந்தையின் விளையாட்டுத் திறனையும் கற்கும் திறனை யும் தடுக்கவே ஒவ்வொருவரது வீட்டிலும் முயற்சிகள் நடக்கின்றன. மாறாக குழந்தை யின் விளையாட்டுத்திறன், கற்கும் திறன் போன்றவற்றை ஊக்குவிக்கும் வகையி லான சூழலைக் கொண்டிருப்பது சில வீடுகள் மட்டுமே.

பெற்றோர் இருவரும் வேலைக்கு சென் றாக வேண்டிய இன்றைய காலகட்டத்தால் குழந்தைக்கு பெற்றோரின் அரவணைப்பு என்பது கால அட்டவணை போட்டுத்தான் கொடுக்கப்படுகிறது. அதைத் தொடாதே, இதை இழுக்காதே என்ற அதட்டல்களால் மிகமிக சுதந்திரமாக தனக்கு பிடித்ததை செய்ய வேண்டிய பிஞ்சு மூளைகளில் இப் போதே அழுத்தம் உருவாகிறது. செய்யக் கூடாததை செய்ய வேண்டாம் என்று கூறு வதை விட செய்யக்கூடியதை செய்ய ஏதுவான சுற்றுச் சூழலை அமைத்துக் கொடுக்க வேண்டியது அவசியம்.

தங்களது குழந்தை எதிர்காலத்தில் என் னவாக வரவேண்டும் என்று பெற்றோர் நினைப்பதில் தவிறில்லை. தான் நினைத்த படியே வரவேண்டும் என்பதற்காக அதையே திரும்ப திரும்பச் சொல்லி குழந்தைகளுக்கு மன அழுத்தத்தை ஏற்படுத்திவிடக்கூடாது. அவ்வாறு செய்தால் அதன் மீது வெறுப்பு ஏற்பட்டுவிட வாய்ப்பு உள்ளது. அதற்கு அனைத்து வசதிகளையும் கொண்ட சுற்றுச் சூழலை குறிப்பாக அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

## பெற்றோர்களுக்கான ஆலோசனை

இது தொடர்பில் சென்னையைச் சேர்ந்த குழந்தை வளர்ப்பு சிறப்பு நிபுணர் வெங் கட்ரமணி கூறியதாவது,சிறப்பான வளர்ப்பு முறை என்பது பிறப்பிலிருந்தே ஆரம்பம். இளம் பருவத்தில் மூளைக்கு அதிக ஆற்றல் உருவாகிறது. அப்போது அதிக சக்தி தேவைப் படுகிறது. அதற்கு ஆரோக்கியமான உடல் நிலை மிக அவசியம்.

காய்கறிகள் . பழங்கள் உள்ளிட்ட ஊட்ட சத்து மிக்க உணவுகள் கொடுக்கப்பட வேண் டும். புத்துணர்ச்சி பெற விளையாட்டு முக்கிய பங்கு வகிக்கிறது.

குழந்தைகளை தாம்தான் புரிந்து கொள்ள வேண்டும். புரிந்துகொள்ள முடிய வில்லை என்றாலும் கூடத் தவறாகப் புரிந்து கொள்ளக்கூடாது. தான் படிக்க முடியாததை தனது பிள்ளைகள் படிக்க வேண்டும், செல்வத்தை ஈட்ட வேண்டும் என்பதற்காக இளம் நெஞ்சங்களில் அழுத்தத்தை உருவாக்காமல் அவர்களுக்கு அதன் மீது ஆர்வத்தை அதிகரிப்பதற்கான நடவடிக்கை களை செயதால் போதும்... அவர்கள் மிக மகிழ்ச்சியாக நீங்கள் நினைத்ததற்கு மேலாக சாதனை புரிவார்கள்.

உதாரணமாக உங்களது குழந்தை அரச அதிபராக வர வேண்டும் என்பது உங்களது ஆசை என்றால் பாடசாலைப் பருவத்திலே யே அரச அதிபர் அலுவலகத்திற்கு அழைத் துச் செல்லுங்கள்.

அங்கு அரச அதிபருக்கு அளிக்கப்படும் மரியாதைகளை உணரச் செய்யுங்கள். இதன் மூலம் தானும் அரச அதிபராக வேண்டும் என்ற ஆசை அவர்களது மனதில் துளிர் விடும். அப்போது அரச அதிபர் ஆவதற்கான பயிற்சி முறைகள், எழுத வேண்டிய தேர்வு கள் ஆகியவற்றை படிப்படியாக தெரிவிக்க வேண்டும்.

இதுவே தனது குழந்தை டாக்டராக வேண்டும் என்றால் ஸ்டெதர்ஸ்கோப் மருத் துவ உபகரணங்கள் ஆகியவற்றை கொடுத்து



தானும் ஒரு டாக்டர் என்ற எண்ணத்தை குழந்தைப் பருவத்திலேயே உருவாக்க லாம்.

வெளியிடங்களுக்கு அழைத்துச் செல்வது, மனதில் எந்த வித அழுத்தமும் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது போன் றவையும் அவசியம். இவற்றை சரியாக செய்தால் குழந்தையின் மனதில் அவை இலட்சியமாகப் பதிந்து படிப்படியாக அதற்கான செயல்களில் இறங்கிவிடுவார் கள்.

இதற்கு பெற்றோரது சரியான அணுகு முறை அவசியம் அதேசமயம் குழந்தை க்கு பிடிக்காத ஒன்றை செய்தாக வேண்டும் என்று கட்டாயப்படுத்தக் கூடாது. அவர் களது ஆர்வத்தையும் விருப்பத்தையும் உணர்ந்து அதற்குரிய வகையில் ஒரு நண்பரைப் போல ஊக்குவிக்க வேண்டும் என்பதையும் மறந்துவிடக்கூடாது பத்து வயதிற்கு பின்னர் அவர்களது அறிவு மற்றும் விருப்பத்தின் அடிப்படையில் அவர்களை சரியான திசைக்கு வழிகாட் டுங்கள்; ஊக்கம் அளியுங்கள் இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# பங்குனி மாதப் பலன்கள்

## மேடம்

*(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதலாம் பாதம் வரை)*

சவால்களைச் சமாளிக்கும் ஆற்றல் பெற்ற மேடராசி நேயர்களே!

பங்குனி மாத கிரகநிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, ராசிநாதன் செவ்வாய் வக்ர நிவர்த்தியாகிவிட்டதால், இனி ஆரோக்கியம் சீராகும். உற்சாகத்தோடும், ஊக்கத்தோடும் பணிபுரியத் தொடங்குவீர்கள். சென்ற மாதத்தில் தேடிவந்த வாய்ப்புக்களை விட்டு விட்டோமே என்று ஆதங்கப்பட்டவர்களுக்கு, மீண்டும் அதே வாய்ப்புக்கள் தேடிவரப் போகின்றன.

இராசிநாதன் செவ்வாய் வக்ர நிவர்த்தியானாலும் கூட, பலமிழந்து நீச்சமாகத் தான் சஞ்சரிக்கிறார். எனவே, மற்றவர்களின் துணையோடுதான் எந்தக் காரியங்களையும் செய்ய இயலும். அதே நேரத்தில் விரய ஸ்தானத்தின் சூரியன், சுக்ரன், புதன் மூவரும் இணைந்து சஞ்சரிக்கிறார்கள். எனவே, குடும்பச் செலவுகள் கூடும்.. குழந்தைகளின் நலன் கருதி தொகையொன்றைச் செலவிடுவீர்.

சனியின் பார்வை விரய ஸ்தானத்தில் பதிவதால், உடன் இருப்பவர்களுக்காகவும், உடல் நலத்திற்காகவும் செலவிட்டுக் கொண்டே இருக்கும் சூழ்நிலை அமையும். அதனால் ஏற்படுகின்ற மனக்கவலை மாற முறையாக முருகப்பெருமான் வழிபாட்டையும், சனி வழிபாட்டையும் மேற்கொள்வது நல்லது.

அன்னதானம் மற்றும் ஆன்மீக வழிபாட்டிற்காக நீங்கள் செலவிடும் தொகை கூடினால் தான் உங்கள் வாழ்க்கை பிரகாசமாக இருக்கும்.

இலாபஸ்தானத்தில் சந்திரனும், குருவும் இணைந்து சஞ்சரிப்பதால், பொருளாதார நிலை தேவைக்கேற்ப வந்துகொண்டே இருக்கும்.

பயணங்கள் அதிகரிக்கும். உத்தியோகம் ,தொழிலில் வரும் மாற்றங்கள் நிரந்தரமானதல்ல. எனவே, அதை மாற்றிக்கொள்ளும் விதத்தில் அக்கறை காட்டுவது நல்லது. வக்ர சனி நிவர்த்தியாகும் வரை தொழிலில் கூடுதல் கவனம் தேவை.

உங்கள் இராசிக்கு மூன்று, ஆறு ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன், மார்ச் 28 ஆம் திகதி மேட ராசியில் சஞ்சரிக்கப் போகிறார். இதுவரை நீச்சம் பெற்றிருந்த புதன் இப்பொழுது கொஞ்சம் பலம் பெறுகிறார். எனவே, எதிர்ப்புகள் அகலும்.ஏற்றம் தரும் வாழ்க்கை அமைய கூட்டாளிகள் ஒத்துழைப்பு தருவர்.

போட்டி, பந்தயங்களில் வெற்றி கிடைக்கும். பூர்வீக சொத்துக்களில் பாகப்பிரிவினை செய்துகொள்ள நினைத்த வர்களுக்கு, சகோதர ஒத்துழைப்போடு தகுந்த பலன்கள் வந்துசேரும்.

இதுவரை மீனத்தில் சஞ்சரித்துவந்த சுக்ரன் , மார்ச் 28 ஆம் திகதி உச்சம்பெற்று மேடத்திற்கு மாறப்போகிறார். இது நன்மை தான். உறவினர் பகை அகலும். உதாசீனப் படுத்தியவர்கள் உங்களைத் தேடி வருவார்கள். நீண்டதூரப் பயணங்களால் பலன் கிடைக்கும். நிகழ்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள். தங்கம், வெள்ளி போன்றவை தங்கும். தாராளமாகச் செலவிட பொருளாதார நிலை இடம்கொடுக்கும்.

இம்மாதம் இனிய மாதமாக அமைய முருகப் பெருமானை வழிபட்டு வாருங்கள். முருகன் வழிபாடு உங்களுக்கு முன்னேற்றத்தை வழங்கும்.

## இடபம்

*(கார்த்திகை 2, 3, 4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள் வரை)*

எண்ணங்களை எளிதில் செயலாக்குவதில் வல்லவர்களாக விளங்கும் இடபராசி நேயர்களே !

பங்குனிமாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, இராசிநாதன் சுக்ரன் உச்சம்பெற்று, தனாதிபதி புதனுடனும், சுகாதிபதி சூரியனுடனும் இணைந்து இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார்.

எனவே, பொருளாதார பற்றாக்குறை அகலும். நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிக்க இயலும். சென்ற மாதத்தில் நடைபெறாத சில காரியங்கள் இப்பொழுது துரிதமாக நடைபெறும். ஆடை, ஆபரணச் சேர்க்கை அதிகரிக்கும்.

அருகில் இருப்பவர்களின் அனுசரிப்போடு புதிய தொழில் தொடங்கும் திட்டங்களை நிறைவேற்றிக்கொள்வீர்கள். 3,8க்கு அதிபதியான சந்திரனும், குருவும் 10 இல் இணைந்து மாதம் தொடங்குவதால், எப்படி இந்தக் காரியம் நடந்தது என்று நீங்கள் ஆச்சரியப்படும் விதத்தில் சில காரியங்கள் நடைபெறும். சிக்கல்களிலிருந்தும், சிரமங்களில் இருந்தும் விடுபடுவீர்கள்.

வக்ரச்சனியின் பார்வை இராசிநாதன் மீது பதிவதால், அடிக்கடி உடல் நிலைத் தொல்லைகள் ஏற்பட்டு அகலும். அஷ்டமத்து இராகுவால் பயணங்கள் அதிகரிக்கும். நீண்ட தூர பயணங்களையும் இடமாற்றம், ஊர் மாற்றங்களையும் தவிர்க்க நினைத்தாலும், தவிர்க்க இயலாது. வாக்கு ஸ்தானத்தில் கேது சஞ்சரிப்பதால் படபடப்பையும் பரபரப்பையும் குறைத்துக் கொள்வது நல்லது.

என்ன இருந்தாலும் முன்கோபம் உங்களின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக இருக்கும். அதைத் தவிர்கக ஆலய வழிபாட்டில் ஆர்வம் காட்டுங்கள். அமைதியாக இருக்க பழகிக் கொள்ளுங்கள். வக்ரச் சனியின் ஆதிக்கத்தால் வளர்ச்சி பாதிக்காமல் இருக்க, சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது. சிறப்பு வழிபாட்டை யோக பலம் பெற்ற நாளில் செய்து வந்தால் தித்திப்பான வாழ்க்கை அமையும்.

மார்ச் 28 ஆம் திகதி மேட இராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். தனாதிபதி விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் தனவிரயம் ஏற்பட வேண்டுமல்லவா? குடும்ப ஸ்தானாதிபதியாகவும்புதன் விளங்குவதால் குடும்பச் செலவு அதிகரிக்கும். கட்டுக்கடங்காத குடும்பச் செலவை சமாளிக்க புதிய கடன்களை வாங்கலாமா? என்று கூட சிந்திப்பீர்கள். பழைய கடன்களை வசூலிக்கும் இந்த நேரத்தில் புதிய கடன்களை வாங்கும் சூழ்நிலை ஏற்படாது.

மார்ச் 28 ஆம் திகதி மேடத்தில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். இராசிநாதன் பன்னிரண்டில் சஞ்சரிக்கும் பொழுது, விரயங்களும், பயணங்களும் அதிகரிக்கும். விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும்.எதிர்கால முன்னேற்றம் கருதி புதிய திட்டங்களைத் தீட்ட நபர்கள் ஒத்துழைப்பு தருவர். அஞ்சல் வழியில் அனுகூலம் உண்டு. ஆரோக்கியத்தில் சிறு குறைபாடுகள் வந்தாலும், உடனடியாக மருத்துவரிடம் காட்டி ஆலோசனை பெறுவது நல்லது. அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் மட்டும் ஆதாயம் கிடைக்கும்.

இம்மாதம் எல்லாநாட்களும் இனிய நாட்களாக மாற, நந்தீஸ்வரர் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது. பிரதோஷ வழிபாடு பெருமை சேர்க்கும்.

(தொடரும்)

---

## பொதுக் கொள்கையின் கீழ்

## பட்டதாரிகளுக்கான நியமனங்கள் வழங்கப்படும்–எம்.சந்திரகுமார் தெரிவிப்பு

நல்லூர் பிரதேச பட்டதாரிகளுக்கும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின், பொதுத் தேர்தலுக்கான வேட்பாளருமான எம். சந்திரகுமாருக்கும் இடையிலான சந்திப்பு அண்மையில் நல்லூர் நாவலர் மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது கருத்துத் தெரிவித்த சந்திரகுமார், இதுவரையில் யாழ் மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளின் நியமனங்கள் தொடர்பிலான பிரச்சினையை நாம் முற்று முழுதாகத் தீர்த்துவைக்கவில்லை என்ற போதிலும் அரசாங்கத்துடன் கலந்துரையாடி, அழுத்தங்களைக் கொடுத்து, கிடைத்த சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி நியமனங்களை வழங்கியுள்ளதாகவும் எதிர்காலத்தில் பட்டதாரிகளின் வேலைவாய்ப்பு தொடர்பிலான பிரச்சினைகளை ஒரு பொதுக் கொள்கையுடன் தீர்த்து வைப்பதாகவும் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் ஊடாக நியாயமான முறையில் பட்டதாரிகளின் அனுசரணையுடன் எதிர்கால நியமனங்கள் வழங்கப்படுமென உணர்த்திய சந்திரகுமார் எமக்கு அரசியல் பலம் அதிகரிக்கும் நிலையில் கடந்த காலத்தை விட வேகமாக இந்நியமனங்கள் தொடர்பில் எம்மால் நடவடிக்கைகளை எடுக்கமுடியும் எனச் சுட்டிக்காட்டினார். (2-6)

## நீதித்துறை கட்டமைப்பின் கௌரவம் இன்னமும் பேணப்பட்டு வருகின்றது

### சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

நாட்டின் நீதித்துறை கூட்டமைப்பின் கௌரவம் இன்னமும் பேணப்பட்டு வருவதாக சிரேஷ்ட சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தவறான அறிக்கைகள் காரணமாக சிலர் சட்டத்தின் முன் சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளதாக சிரேஸ்ட சட்டத்தரணியும் சட்டம் தொடர்பான விரிவுரையாளருமான ஜெ.எம்.விஜயபண்டார தெரிவித்தார்.

சிரேஷ்ட சட்டத்தரணி சரத் விஜயசிங்க கருத்துத் தெரிவிக்கையில், இந்த நாட்டின் நீதித்துறை கட்டமைப்பு சில சட்டநுணுக்க உலகிற்கேற்ப மாற்றப்படவேண்டும் எனவும் இதனை நீதி ஆணைக்குழுவின் மூலமாகவே மேற்கொள்ள முடியும் என்றார்.

ஜனாதிபதியின் குறிக்கோளின் படி இந்த நாட்டு மக்கள் மத்தியில் நியாயமான சமூகம் உருவாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (2-4)

## த.தே.கூட்டமைப்பின் பிரசாரக் கூட்டம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் (தமிழரசுக்கட்சி) பிரசாரக் கூட்டம் எதிர்வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு சாவகச்சேரி நகரசபை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் முதன்மை வேட்பாளர் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (6-4-29)



அச்சுவேலி மத்திய கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மல்லாகம் மாவட்ட நீதிபதி க.அரியநாயகம் மற்றும் திருமதி அரியநாயகம் ஆகியோருக்கு கல்லூரி அதிபர் மலர்ச்செண்டு கொடுத்து வரவேற்பதையும். பிரதம விருந்தினர் தேசியக் கொடியை ஏற்றி வைப்பதையும். திருமதி அரியநாயகம் வெற்றிபெற்ற மாணவிக்கு கேடயம் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# ஆட்சியை பிடிக்க உதவுமா ராகுலின் புது வியூகம்

(கொழும்பு)

கடந்த லோக்சபா தேர்தலில் வெற்றி பெற்று, மத்தியில் காங்கிரஸ் கட்சி ஆட்சியை பிடித்தவுடன், வெற்றிக்குப் பெரிதும் காரணமான ராகுலை பிரதமர் மன்மோகன் சிங் நேரில் சென்று சந்தித்தார். உங்களின் கடுமையான முயற்சியாலும்,தேர்தல் வியூக த்திலுமே கட்சிவெற்றி பெற்றுள்ளது. எனவே, நீங்கள் கட்டாயம் அமைச்சரவையில் இடம்பெறவேண்டும் என் றார்.அதற்காக பல்வேறு மாநிலங்களில் கட் சி யை வளர்க்க வேண்டியுள்ளது. அதற்காக நாடு முழுவதும் சென்று, ஆய்வு மேற்கொள்ளவேண்டும். அமைச்சராகி, டில் லி யில் அமர்ந்துவிட்டால் எப்போதும் எனக்கு அந்த வாய்ப்பு கிடைக்காது. எனவே, உங்கள் கோரிக்கையை இப்போது ஏற்றுக்கொள்ள முடியாது என்று ராகுல் திட்டவட்டமாகக் கூறிவிட்டார்.

தமிழகத்தில் கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக திராவிடக் கட்சிகளின் தோள் மீது சவாரி செய்து வரும் காங்கிரஸ் கட்சிக்கு, இளைஞர்கள் மூலம் புது ரத்தம் பாய்ச்ச வேண்டும் என்பது ராகுலின் திட்டம். தனியார் உளவு அமைப்புக்கள் மூலம் தமிழக காங்கிரஸ் கட்சியின் உண்மையான பலத்தை அறிந்துகொண்ட ராகுல், இனி பெரியவர்களை நம்பி பயனில்லை என்பதை உணர்ந்து, இளைஞர்களை உறுப்பினர்களாக்கி, அதன்மூலம் கட்சியை பலப் படுத்தினால் மட்டுமே காங்கிரஸ் மீண்டும் அரியணையில் அமர முடியும் என்பதை தெரிந்து கொண்டார். முதற்கட்டமாக, இளைஞர் காங்கிரசுக்கு உறுப்பினர் சேர்க்கைப் பணியும் அதைத் தொடர்ந்து தேர்தல் நடத்தும் பணியும் சிறப்பாக நடந்து வருகின்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

# இன்றைய இளைஞர்களிடம் தமிழ் உணர்வுகள் இல்லை

## இஸ்ரோ மேலதிக செயலர் தெரிவிப்பு

(மதுரை)

இன்றைய இளைய தலைமுறையினரிடம் தமிழ் உணர்வு இல்லாத நிலை தொடர்கிறது என இஸ்ரோ விண்வெளித்துறையின் மேலதிக செயலர் பாலச்சந்திரன் தெரிவித்தார்.

மதுரையில் வேலம்மாள் பொறியில் கல்லூரி ஆண்டு விழாவில் அவர் பேசியதாவது,

இளைய தலைமுறையினரின் மிகப்பெரிய சொத்து தமிழ். இது குறித்து எந்த உணர்வும் இல்லாமல் இருக்கிறார்கள். மாணவர்களுக்கு ஒழுக்கம் கட்டுப்பாடு இவற்றை பெற்றோர்களும் கற்றுக் கொடுப்பது இல்லை. 95 சதவீதம் மாணவர்களுக்கு தமிழ் பேசத் தெரியும் ஆனால் தமிழ் உணர்வு இல்லாமல் உள்ளனர்.

வெளிநாடுகளில் கணியன் பூங்குன்றனாரின் யாதும் ஊரே யாவரும் கேளீர் என்ற வரியின் விளக்கத்தை கேட்டு ஆச்சரியமடைகின்றனர். இதுபோல் பல தமிழ் கவிஞர்களின் கவிதைகளை சொல்லும் போது அவர்கள் வியந்து பாராட்டுகின்றனர்.

மேலும் நமது பாரம்பரியம் குறித்து நம் மாணவர்களுக்கு தெரியவில்லை. தமிழ் கற்பதால் எந்த பயனும் இல்லை என்ற கருத்து உள்ளது. பாரதியார் மொழியையும் இனத்தையும் இணைத்து கவிதை பாடினார். ஆனால் நாம் அவற்றை உணராமல் உள்ளோம்.

விஞ்ஞானத்திலும் பொறியியல் துறையிலும் வெளிநாட்டவருக்கு சமமாக இருக்கிறோம். ஆனால் மொழியின் பாரம்பரியம் குறி ஷத்து தெரியாமலே வாழ்கிறோம். இந்நிலை மாறினால் தான் அறிவால் உயர் நிலையை அடைய முடியும் என்றார். (2-6)

# பதினெட்டு வயதிற்குட்பட்டோருக்கு கைத்தொலைபேசி அட்டை கிடையாது

## பங்களாதேஷில் புதிய சட்டம்

(டாக்கா)

பங்களாதேஷில் 5 கோடியே 60 இலட்சம் பேர் கைத்தொலை பேசி பயன்படுத்துகிறார்கள். இவர்களில் பல ஆயிரம் பேர் அதன் மூலம் மிரட்டல் விடுத்ததாகவும் பணம் கேட்டு மிரட்டியதாகவும் புகார்கள் வந்தன.

இதைத் தொடர்ந்து இப்படி மிரட்டல் போன்ற குற்றச்சாட்டுக்களில் ஈடுபட்ட 2 இலட்சம் பேரின் கைத்தொலைபேசி இணைப்புக்கள் இரத்து செய்யப்பட்டன. மேலும் 12 இலட்சம் பதிவு பெறாத சிம் கார்டுகள் முடக்கி வைக்கப்பட்டுள்ளன.

பிரதமர் ஷேக் ஹசீனா அவர் உறவினரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பஸ்லே நூர் தபோஷ் ஆகியோருக்கும் கூட மிரட்டல் எஸ்.எம்.எஸ்கள் வந்தன.

இதைத் தொடர்ந்து அந்த நாட்டு அரசு புதிய சட்டம் கொண்டுவந்து உள்ளது. அதன் படி 18 வயதுக்கு உட்பட்டவர்கள் கைத்தொலைபேசி அட்டை வாங்க முடியாது. மேலும் கைத்தொலைபேசி அட்டைகளை விற்பவர்கள் பள்ளிக்கூட படிப்பு படித்தவர்களாக இருக்கவேண்டும். பொலிஸாரின்சோதனைக்குஉட்படுத்தப்பட்டுஇருக்கவேண்டும்என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது.(2-6)



உலக கோடீஸ்வரர் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்த மெக்சிக்கோ தொழிலதிபரான டைகூன் கார்லஸ் சிலிம் (வலது) லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் பிரதமர் ஸாத் ஹரரியை சந்தித்துக் கலந்துரையாடுவதை படத்தில்காணலாம்.

# ஜவாக் கடலில் தவிக்கும்

# இலங்கை அகதிகளை மீட்க மத்திய அரசு உதவ வேண்டும்-பழ நெடுமாறன்

(திருச்சி)



ஜாவா கடலில் கப்பலில் சிக்கித் தவிக்கும் 257இலங்கைத் தமிழ் அகதிகளை மீட்க அவுஸ்திரேலிய அரசை இந்திய அரசு வற்புறுத்த வேண்டும் என்று இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்க ஒருங்கிணைப்பாளர் பழ நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

திருச்சியில் சனிக்கிழமை அவர் அளித்த பேட்டியில் இலங்கை சிங்கள இராணுவத்துக்கு அஞ்சி உயிர் பிழைக்க பழுதடைந்த கப்பல் ஒன்றின் மூலம் 257 தமிழர்கள் அவுஸ்திரேலிய நோக்கி பயணம் செய்தனர். நடு வழியில் ஜாவா கடல் அருகே இந்தோனேசிய கடற்படை அவர்களைத் தடுத்து நிறுத்தியது.

கடந்த 150 நாட்களுக்கும் மேலாக அந்தக் கப்பலில் உள்ள ஆண்கள், பெண்கள், குழந்தைகள் அனைவரும் உணவோ, மருந்தோ போதுமான அளவு இல்லாமல் தவித்து வருகின்றனர்.


கப்பலை விட்டு இறங்கினால் இந்தோனேசிய அரசு தங்களை இலங்கைக்கு திரும்ப அனுப்பிவிடுமோ என்ற அச்சத்தில் கப்பலிலேயே இருந்து கொண்டு உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

அவுஸ்திரேலியா பிரதமர் கெவின் ரூத் இந்தோனேசியக் குடியரசுத் தலைவர் சுசிலோ பாங்பேங்க் யுதோனோ ஆகிய இருவரும் கடந்த 10ஆம் திகதி அவுஸ்திரேலியாவில் கான்பெரா நகரில் சந்தித்துப் பேசினர். ஆனாலும் தமிழ் அகதிகளுக்கு அவுஸ்திரேலியாவில் இடம் கொடுத்து ஆதரிப்பது குறித்து எந்த முடிபும் எடுக்கவில்லை. எனவே இந்த அகதிகளுக்கு அடைக்கலம் கொடுக்கும்படி அவுஸ்திரேலிய அரசை வலியுறுத்த வேண்டிய கடமை இந்திய அரசுக்கும் உலக நாடுகளுக்கும் உண்டு.

இந்த கோரிக்கையை மனிதாபிமானத்துடன் அணுகி தமிழ் அகதிகளின் உயிர்களை இந்திய அரசு காக்க வேண்டும். அவுஸ்திரேலியாவுக்கு அனுப்ப முடியாவிட்டால் தமிழ்நாட்டு அகதிகளின் முகாமிலாவது அவர்களைத் தங்க வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்றார். (2-6)

# தற்கொலை படை தாக்குதல் பாகிஸ்தானில் 13பேர் பலி

(பெஷாவர்)



பாகிஸ்தானின் வடமேற்கில் உள்ள சுவாட் பள்ளத்தாக்கு பகுதியில் நீதிமன்ற வளா கத்திற்கு வெளியே நடந்த தற்கொலைப் படை தாக்குதலில் நான்கு பொலிஸார் உட்பட 13 பேர் கொல்லப்பட்டனர். 52 பேர் காயமடைந்தனர்.

இதுகுறித்து பெஷாவர் மாவட்டபொலிஸ் உயர்அதிகாரி குவாசிக்குலாம் பரூக் கூறியதாவது,

பாகிஸ்தானின் சுவாட் பள்ளத்தாக்கு பகு தியில் உள்ள மிங்கோரா நகரில் அதிக பாது காப்பு நிறைந்த நீதிமன்ற வளாகத்திற்கு வெளியே பயங்கரவாதி ஒருவன் ரிக்ஷாவில் வந்து இறங்கினான்.

நீதிமன்ற வளாகத்தை நோக்கி அவன் நடந்து செல்லும் போது பாதுகாப்பு அதிகாரிகள் பார்த்தனர். அவனை நோக்கி துப்பாக்கியால் சுட்டனர். உடனே அவன் தன் உடலில் கட்டியிருந்த வெடி குண்டுகளை வெடிக்கச் செய்தான்.

உயிரிழந்தனர். 52 பேர் காயமடைந்தனர். இந்த தாக்குதல் சம்பவத்தில் ஐந்து கார்கள் சேதமடைந்தன.

இந்த தற்கொலைத் தாக்குதலுக்கு 15 கிலோ வெடிமருந்து பயன்படுத்தப்பட்டுள்ளது. இச் சம்பவத்திற்கு இதுவரை எந்த பயங்கர வாத இயக்கமும் பொறுப்பேற்கவில்லை. தாக்குதலை தொடர்ந்து இப்பகுதியில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. விடுதி மற்றும் கடைகள் மூடப்பட்டன. இவ்வாறு பரூக் கூறியுள்ளார். (2-6)

# திபெத்தில் கடும்பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ள சீனப்படையினர்

(சீனா)

திபெத்தில் சீன படையினர் கடும் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. சீனாவிற்கு எதிராக திபெத் மக்களினால் கிளர்ச்சி நடத்தப்பட்டு இரண்டாவது ஆண்டு பூர்த்தியாகவுள்ள தருணத்தில் அசம்பாவிதங்கள் நிகழக் கூடுமென எதிர்பார்க்கப்படுவதாலேயே இந்த ஏற்பாடு.

இதற்கமைய திபெத் தலைநகர் லாசா உள்ளிட்ட சகல பிரதேசங்களிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. காவல்துறையினர் பல்வேறு சோதனை நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரண்டு தசாப்த காலமாக நீடித்து வரும் சீன-திபெத் பிரச்சினை கடந்த 2008ஆம் ஆண்டு உக்கிர நிலையை அடைந்தது.

சீன-திபெத் முறுகல் நிலைக்கு திபெத்தின் ஆன்மீகத் தலைவர் தலாய்லாமாவே காரணம் என சீன அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது. எனினும் இந்தக் குற்றச்சாட்டுக்களை தலாய்லாமா நிராகரித்துள்ளார். (2-6)

# தமிழ் தேசியத்திற்கான மக்கள் முன்னணி தோற்றம் பெற்றது ஏன்?



எஸ். வரதராஜன் (முதன்மைவேட்பாளர்)

(நேற்றைய தொடர்ச்சி...)

ஒக்டோபர் மாதம் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுக் கூட்டம் கூட்டப்பட்டபோதுதான் முதன் முதலில் தீர்வுத்திட்ட வரைபு வாசிக்கப்பட்டது. ஆங்கிலத்தில் வாசிக்கப்பட்டு தமிழில் மொழி பெயர்த்துக் கூறப்பட்டது. ஒருவருடத்திற்கு மேலான காலத்தில் அவர்கள் தயாரித்த வரைபு சில மணிநேரம் தொடர்ச்சியாக வாசித்து முடிக்கப்பட்ட பின்னர் உடனடி யாகவே அதன் மீதான ஆலாசனைகள் தெரி விக்க வேண்டும் எனக் கேட்கப்பட்டது. பாராளுமன்ற உறுப்பினர்கள் தீர்வுத்திட்ட வரைபு ஒன்றின் பிரதியை தமக்கு வழங்குமாறு வலியுறுத்திய பொழுதிலும் அவ்வாறு தரமுடியாது என்று மறுக்கப்பட்டது. ஆனாலும் வாசிக்கப்பட்டதை செவிமடுத்த அடிப்படையில் அபிப்பிராயங்களை உடனடியாக முன்வைக்குமாறு கூட டமைப்பின் மூத்த தலைமை வற்புறுத்தியது. எனினும் தமக்கு காலம் தேவை என உறுப்பினர்கள் வற்புறுத்தியமையினால் மூன்று நாள் அவகாசம் மட்டுமே வழங்கப்பட்டது.

*இரா.சம்பந்தனின் பிடிவாதம்*

இறுதியாக கடந்த டிசம்பர் 09 ஆம் திகதி தீர்வுத்திட்டத்தினை இறுதி செய்வதற்கென சட்டத்தரணிகளுடனான கலந்துரையாடலுக்காக கட்சித் தலைவர்களுக்கு மட்டும் சம்பந்தன் அழைப்பு விடுத்திருந்தார். அந்தக் கலந்துரையாடலுக்கு கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரனையும் அழைத்துச் சென்றிருந்தார். அந்த கலந்துரையாடலில் இரா. சம்பந்தன், மாவை சேனாதிராஜா, கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். தீர்வுத்திட்டத்தினை இறுதிப்படுத்தும் அந்தக் கலந்துரையாடலில் தீர்வுத் திட்டம் வாசித்து விவாதிக்கப்பட்டது. அந்த வரைபானது தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை, தனித்துவமான தேசம், இறைமை ஆகிய அடிப்படை கோட்பாடுகளுக்கு முற்றிலும் முரணாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அடிப்படை கோட்பாடுகள் கைவிடப் பட்டுள்ளமை கஜேந்திரகுமார், மற்றும் கஜேந்திரன் ஆகியோரால் சுட்டிக்காட்டப்பட்டது. அவற்றை கைவிட முடியாது அவற்றின் அடிப்படையிலேயே தீர்வுத்திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும் என மீளவும் வலியுறுத்தப் பட்டது. ஆனால் இரா. சம்பந்தன் அவாகள் 'மேற்படி கோட்பாடுகளின் அடிப்படையில் தீர்வுத்திட்டத்தினை தயாரிக்க முடியாது அவை நடைமுறைச் சாத்தியமற்றவை. இதை இந்தியா விரும்பாது. இந்தியா விரும்பும விடயங்களையே நாம் தீர்வாக முன் வைக்க வேண்டும். இந்தியா விரும பாத வியடத்தினை தான் ஒருபோதும் செய்யப்போவதில்லை' என்று வலியுறுத்தினார். தொடர்ந்தும் கொள்கை விடயத்தினை வலியுறுத்த முற்பட்ட பொழுது 'நீங்கள் கோசங்கள் போட வேண்டாம் என்றும் தான் தயாரித்துள்ள தீர்வுத்திட்டமே இறுதியானது' என்றும் தான் அதனை முடிவு செய்துள்ளதாகவும் அதனையே தான் சமர்ப்பிக்க உள்ளதாகவும் ஆணித்தரமாக கூறியிருந்தார். நாம் ஒத்துழைப்புத் தராவிட்டாலும் எஞ்சியவர்களது ஆதரவுடன் தான் அந்த தீர்வுத்திட்டத்தினை முன்வைத்தே தீருவேன் என்றும் உறுதிபடக் கூறி விட்டார்.இவ்வாறு கூறப்பட்ட பின்னரும் கூட ஒற்றுமையை காப்பாற்றுவதற்காக கடுமையான முயற்சிகளை

## பொதுத் தேர்தல்-2010




மேற்கொண்டிருந்தோம். இந்த முயற்சிகளின் இறுதிக் கட்டமாக இந்தப் பாராளுமன்ற தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கொள்கை தொடர்பான முடிவு எடுப்பதற்காக மாசி 16 – 19ஆம் திகதி வரை நான்கு நாட்கள் நீண்ட கலநதுரையாடல் இடம் பெற்றது. இந் நீணட கலந்துரையாடலின் பின் னரும அடிப்படைக் கொள்கைகளை உள்வாங்குவதற்கு த.தே.கூ வின் தலைமை தயாராக இல்லை.

*மக்களின் பங்களிப்புடனேயே*

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் இணைந்து யுத்தத்தை நிறுத்துவதற்கான முயற்சிகளில் புலம் பெயர்ந்த தமிழ் மக்களுடன் இணைந்து ஈடுபடவேண்டியிருந்த நிலையில் வெளிநாடுகளுக்கு சென்றிருந்தனர். கொள்கையில் உறுதியானவர்களை கொச்சைப்படுத்தும் நோக்கில் தமிழ் தேசியத்திற்கு எதிரான சக்திகள் திட்டமிட்டு அவதூறு பரப்பி வருகின்றன.

இதேவேளை தமிழ் இனத்தின் தலைவிதியை தீர்மானிக்கப் போகும் தீர்வுத்திட்டத்தினை உருவாக்கும் விடயத்தில் சிலர் நாட்டில் இருக்கவில்லை என்பதனை காரணம் காட்டி அடிப்படை கொள்கைகளை கைவிட்டு தீர்வுத் திட்டம் ஒன்றை தயாரிப்பதனை எந்த வகையில் நியாயப்படுத்த முடியும்.

*தமிழர் இறைமைக் கோரிக்கையைத் திரிபுபடுத்த முயலும் கூட்டமைப்பு தலைமை*

த.தே.கூ ன் அறிக்கையில் தமிழ் தேசியத்திற்கான மக்கள் முன்னணி ஸ்ரீலங்காவின் இறைமையை நிராகரிப்பதாக கூறியுள்ளதாக திரிபுபடுத்தியுள்ளனர்.

## ஊடக அறிக்கையில் விளக்கம்

*தீர்வுத்திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும்*

மேலும் த.தே.கூ ன் அறிக்கையில் கஜேந்திரகுமாருக்கு மாற்றுச் சிந்தனை இருந்திருந்தால் வேறு தீர்வுத்திட்டத்தினை முன்வைத்து விவாதித்து இருக்கலாம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழ் இனத்தின் அரசியல் எதிர்காலத்தினை நிர்ணயிக்கப் போகும் தீர்வுத்திட்டத்தினை ஓரிரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களும், ஓரிரண்டு சட்டத்தரணிகளும் தயாரித்து முன்வைக்கும் செயற்பாடாக மேற்கொள்வது அபத்தமானது. தீர்வுத் திட்டம் தயாரிக்கும் வேலைத்திட்டம் மேற்கூறப்படும் கொள்கை அடிப்படைகளில் இருந்து வழுவாது தமிழ்த் தேசியத்தின் பொது அமைப்புக்கள், புத்திஜீவிகள், சட்டவல்லுனர்கள், புலம் பெயர் தமிழ் சமூகத்தினர் உள்ளிட்ட சகல தரப்பினருடனும் விரிவான ஆழமான கலந்துரையடல்கள் மூலம் மேற்கொள்ளப்படல் வேண்டும். அவர்களது பங்களிப்புக்களுடனும் ஒட்டுமொத்த தமிழ் சமூகத்தினையும் அரவணைத்துச் செல்லும் வகையிலும், தமிழ் மக்களின் ஆழமான அரசியல் அபிலாசைகளை பிரதிபலிக்கும் வகையிலுமே இம்முயற்சி மேற்கொள்ளப் படல் வேண்டும். அதனையே கூட்டமைப்பின் தலைமையிடமும் வலியுறுத்தியிருந்தோம். எதிர்காலத்தில் தமிழ் தேசியத்திற்கான மக்கள் முன்னணி இவ்வாறே செயற்படும்.

*த.தே.ம.மு இன் உறுப்பினர்கள் மீது திட்டமிட்டுப் பரப்பப்படும் அவதூறு*

த.தே.கூ வின் அறிக்கையில் கஜேந்திரன் மற்றும் பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் வருடக்கணக்கில் வெளிநாடுகளில் தங்கியிருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்கள் இரண்டு பேரும் கடந்த 2006 - 2008ஆம் ஆண்டு வரை அதிக காலம் வன்னியில் மக்களுடன் தங்கியிருந்தனர். 2008 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் த.தே.கூ ன் வெளிவிவகாரக் குழு உறுப்பினர்களாகிய திருமதி. பத்மினி சிதம்பரநாதன், செ.கஜேந்திரன், ஜெயானந்தமூர்த்தி,

தமிழ் தேசியத்திற்கான மக்கள் முன்னணி 28-02-2010 அன்று வெளியிட்ட அதன் முதலாவது ஊடக அறிக்கையில் தமிழர்களின் தாயகம் தேசியம், சுயநிர்ணய உரிமை, தனித்துவமான தேசம், இறைமை என்பவற்றிற்கான அங்கீகாரம் பெறப்படல் வேண்டும் என்று மட்டுமே வலியுறுத்தியிருந்தது. மாறாக ஸ்ரீலங்காவின் இறைமை பற்றி எந்தவொரு விடயத்தினையும் நாம் குறிப்பிட்டிருக்கவில்லை.

*தமிழ்த் தேசிய சக்திகளை காட்டிக் கொடுக்க முயலும் த.தே.கூ தலைமைகள்*

தமிழ் மக்களின் அடிப்படை கொள்கைகளை வலியுறுத்த முயலும் தமிழ் தேசியத்திற்கான மக்கள் முன்னணியினரை 6ஆம் திருத்தச் சட்டத்திற்கு எதிராக செயற்படுபவர்களாகவும் தனி நாட்டுக் கோரிக்கை என்ற நடைமுறைச் சாத்தியமற்ற ஒன்றை முன் வைப்பவர்களாகவும் காட்டி சிங்கள மக்களையும் அரசையும் ஆத்திரமடையச் செய்து சட்டச் சிக்கலில் மாட்ட வைக்கும் உள்நோக்கிலேயே இவ்வாறான கருத்துக்களை முன்வைத்துள்ளனர்.

*நீதியான, சாத்தியமான தீர்வுப்பாதையில் தமிழ் தேசியத்திற்கான மக்கள் முன்னணி*

தமிழத் தேசியத்திற்கான மக்கள் முன்னணியானது இரண்டு தேசங்கள் என்ற யதார்த்தம் அங்கீகரிக்கப்படுவதனூடாகவே ஒரு நாட்டுக்குள் நாம் நீதியான ஒரு தீர்வை பெறமுடியும் என்ற உறுதியான நிலைப்பாட்டில் உள்ளது.

த.தே.கூ வின் அறிக்கையில் தமிழரது அடிப்படைக் கொள்கைகளை வெற்றுக் கோசங்கள் எனவும், தத்துவங்கள் எனவும் கேலி செய்துள்ளமை கவலைக்குரிய கண்டிக்கப்பட வேண்டிய விடயமாகும். இக் கொள்கைகள் தமிழ் மக்களை பொறுத்த வரையில் 1,50,000 திற்கும் அதிகமான மக்கள் தமது உயிர்களை தியாகம் செய்யுமளவுக்கு மிகவும் உன்னதமான உயரிய கொள்கைகளாகவே உள்ளன. இக் கொள்கைகள் தந்தை செல்வாவினால் முன்வைக்கப்பட்ட கொள்கைகளாகும். இக் கொள்கைகளை வெற்றுக் கோசங்கள் என கேலி செய்வதன் மூலம் தமிழரசுக் கட்சியின் வாரிசுகள் என்று தம்மை கூறிக் கொண்டு வீட்டுச் சின்னத்தில் போட்டியிடும் இவர்கள் தமது கடந்த காலத் தலைமையையே கேலிக்குள்ளாக்குகின்றனர்.

த.தே.கூ வின் அறிக்கையில் தமிழ் தேசியத்திற்கான மக்கள் முன்னணி கூறுகின்ற இரு தேசங்கள் ஒரு நாடு என்ற கொள்கை நடைமுறைச் சாத்தியமற்றது என்கின்றனர். அதேவேளை தமிழ் தேசியக் கூட்டமைப்பு முன்வைக்கவுள்ள அதிகாரப் பகிர்வு ஊடான சமஸ்டி என்ற தீர்வுத்திட்டத்தினை சிங்கள தேசம் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்றும் ஒப்புக் கொண்டுள்ளனர். அப்படி யாயின் அவர்கள் முன்வைக்க



கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

விருக்கின்ற தீர்வுத்திட்டம் எப்படி நடை முறைச் சாத்தியமானதாகும்?

இந்தியாவின் நிர்ப்பந்தத்தினாலேயே 20 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ் மக்களின் விரும்பமின்றி 13ஆம் திருத்தச் சட்டம் உருவாக்கப்பட்டது. அச்சட்டம் அன்றைய தினத்தில் இருந்தே நடைமுறைப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால் நடைமுறைப்படுத்தப்படவில்லை. தமிழ் தேசியக் கூட்டமைப்பினாலேயே நிராகரிககப்பட்டுள்ள 13 ஆம் திருத்தச் சட்டத்தினை 20 வருடங்களின் பின்னர் பிரிக்கப்பட்ட வடக்கு கிழக்கில் நடைமுறைப்படுத்துவது பற்றியே இன்னமும் சிங்கள அரசு பேசிக் கொண்டிருக்கின்றது. ஆனால் அதனைச் சிங்கள அரசு நடைமுறைப்படுத்தப் போவதில்லை என த.தே.கூ வின் தலைமையும் ஒப்புக்கொண்டுள்ளது.

13 ஆம் திருத்தச் சட்டத்திற்கு அப்பால், அதிகாரப்பகிர்வு அடிபபடையில் த.தே.கூவின் தலைமையினால் தயாரிக்கப்பட்டுள்ள தீர்வுத்திட்டதினை சிங்கள அரசு ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என தமிழ் தேசியக் கூட்டமைப்பு தனது அறிக்கையிலேயே கூறுகின்றது.

இந்தத் தர்க்கத்தின் அடிப்படையில் த.தே.கூ முன்வைக்க விரும்புவது சிங்கள அரசு தர விரும்புகிற ஒரு தீர்வுத்திட்டத்தையா? சிங்கள அரசுக்கு 'நடைமுறைச் சாத்தியமான' தீர்வுத்திட்டத்தைத்தான் த.தே.கூ தலைமை முன்வைக்கப்போகின்றதெனின் 13வது திருத்தச்சட்டத்திற்குக் குறைவானதொரு தீர்வைத்தான் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைமை முன்வைக்க வேண்டிவரும். 'நடைமுறைச்சாத்தியம்' என்ற பெயரில் த.தே.கூ இன் தலைமை அதனைத் தான் செய்யப்போகின்றதா? இப்படிப் பட்ட 'நடைமுறைச் சாத்தியமான' அரைகுறைத் தீர்வைப் பெறுவதற்கு ஒரு தமிழ்த் தலைமை தேவையேயில்லை. (12ஆம் பக்கம் பார்க்க...)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்...

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

- புலம் பெயர்ந்த தமிழ் மக்களதும், சர்வதேச சமூகத்தினதும் செயலூக்கமிக்க பங்களிப்பின் மூலம் வடக்கு - கிழக்கு மாகாணத்தில், முழுமையான மீள் குடியேற்றமும், புனர்வாழ்வு, மற்றும் அபிவிருத்தியாகியன முன்னெடுக் கப்படும்.
- அகதிகள் என்ற நிலை அடியோடு நீக்கப்படவேண்டும் - அதுவரை அகதிகளுக்கு வழங்கப்படும் நிவாரணம் இன்றைய உயர்ந்து வரும் வாழ்க்கைச் செலவை ஈடுசெய்யும் வகையில் உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை எடுப்போம்.
- சமூக, பொருளாதார ரீதியில் பின்தங்கிய சமூகங்களின் சமத்துவத்தை உறுதிப்படுத்தவும்; அவர்களின் வாழ்க்கைத் தரம், வாழ்வாதாரம் மற்றும் தொழில் துறையினை மேம்படுத்தவும் உத்தரவாதப்படுத்தும் வகையில் சமூக மேம்பாட்டு ஆணையம் ஒன்றின் அவசியத்தை வற்புறுத்தி நிற்கின்றோம்;
- கரையோர மக்கள், மீனவ சமூகம் சுதந்திரமாகத் தங்கள் தொழிலை நடத்துவதற்கும், தங்கள் தொழிலில் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதற்கும் சந்தைப்படுத்துவதற்கும், அவர்கள் வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதற்கும் பொருத் தமான நடவடிக்கையை முன்னெ டுப்போம்.
- அடித்தட்டு மக்கள், கூலித் தொழிலாளர்கள் ஊதியம் மற்றும் வாழ்வாதாரம் மேம்படவும், தனியார் துறைஊழியர், அரச ஊழியர் சம்பளம் உயர்ந்து வரும் வாழ்க்கைச் செலவை ஈடுசெய்யும் வகையில் உயர்த்தப்பட வேண்டும்.
- நம் சமூகத்தில் பெண்களின் சமத்துவத்தை பேணவும். போர் காரணமாக அநாதரவாக்கப்பட்டுள்ள இலட்சக்கணக்கான பெண்கள், முதியோர், சிறுவர் ஆகியோரின் பாதுகாப்பு மற்றும் எதிர்கால நல்வாழ்வுத்திட்டங்கள் உத்தரவாதப்படுத்தவும் நடவடிக்கை எடுப்போம்.
- வேலையற்ற பட்டதாரிகள், மற்றும் வேலையற்றோர் தொழில்வாய்ப்பு பெறுவதை உறுதிப்படுத்தும் வகையில் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் நாம் உறுதி பூண்டுள்ளோம்.

*2010 பொதுத் தேர்தலில் எதிர்நோக்கும் சவாலான பிரச்சினைகள்*

ஒன்றுபட்ட நாட்டிற்குள் தமது தலைவிதிகளைத் தாமே தீர்மானிக்கக் கூடிய தமிழ்மக்களின் மறுக்க முடியாததும், பிரிக்கமுடியாததுமான உரிமைகளை இலங்கையின் அரசாங்ங்கள் தொடர்ச்சியாக நிராகரித்தே வந்துள்ளன. 1956ம் ஆண்டிலிருந்து அவர்களின் இறைமைக்கான கோரிக்கைகள் அனைத்தும் நியாயப்படுத்த முடியாத வகையில் மறுக்கப்பட்டே வந்துள்ளது.

30 ஆண்டுகால அஹிம்சை வழிப் போராட்டங்கள் அனைத்தும் கொடூரமான அடக்குமுறை மூலம் நசுக்க முற்பட்டமையே ஓர் தவிர்க்க முடியாத ஆயுதப்போராட்டத்திற்கு வழிவகுத்தது. அடுத்துவந்த முப்பதாண்டுகளில் ஆயுத ரீதியான எதிர்ப்பை அடக்குதல் என்ற பேரில் எமது மக்களின் அடிப்படை உரிமைகள் மோசமாய் பறிக்கப்பட்டது. அப்பாவிப் பொதுமக்கள் மீது விமானக்குண்டு வீச்சுகள் நடாத்தப்பட்டன, மக்கள் செறிவாக வாழும் பகுதிகள் தொடர்ச்சியான எறிகணைத் தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டன, மக்கள் தமது வீடுகளிலிருந்து விரட்டியடிக்கப்பட்டனர், ஏராள மான இளைஞர்கள் சிறைப்படுத்தப்பட்டும், சித்திரவதைகளுக்குள்ளாக்கப்பட்டும் மேலும் மீறல்களுக்கு உள்ளாக்கப்பட்டனர். அத்துடன் அநேகர் கொல்லப்பட்டும் ஊனமுற்றும் சொத்துக்களை இழந்துமுள்ளனர். மிகக்கடுமையான மனித உரிமை வேண்டுமென்ற சர்வதேச சமூகத்தின் வலியுறுத்தல் மூலம் விசாரணைக்கு அமைக்கப்பட்டபோதும் அது ஆக்கபூர்வமான தீர்வொன்றிக்கு இட்டுச்செல்லாமல் முடிவிற்கு வந்தது.

அரசகாணி சம்பந்தமாகவும் மற்றைய வளங்கள் சம்பந்தமாகவும், குடிசன பரம்பலை மாற்றியமைக்கும் நோக்குடன் அரசாங்கம் எடுத்திருக்கும் நடவடிக்கைகள் நிறுத்தப்படவேண்டும். இதற்கென ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானங்கள் மாற்றி அமைக்கப்படவேண்டும்.

இலங்கை அரசாங்கமானது அப்பட்டமாக இந்திய இலங்கை ஒப்பந்தத்தை மீறி இணைக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணத்தை பிரித்துவிட்டதாகக் கூறுகின்றது. வியன்னா பொது இணக்க ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டது என்ற வகையில் இந்திய இலங்கை உடன்பாட்டை இலங்கை மீற முடியாது. அரசாங்கத்தின் நீதித்துறையானது பாரபட்சமானதும், அதிகாரத்துவப் போக்குடையதுமான பல்வேறு நடவடிக்கைகளின் அனுபவங்கள் தமிழ் மக்கள் அரசின் நீதித்துறையையும் ஏற்றுக்கொள்ள முடியாத நிலைக்கு தள்ளியிருக்கின்றது.

இந்நாட்டின் நிர்வாகத்துறையின் கொள்கைகள் தமிழ்மக்களை இந்நாட்டிலிருந்து இல்லாதொழிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இவ்வகையில் பெருமளவு தமிழ் மக்கள் தொடர்ச்சியாக நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர்.

இன்றிருக்கக் கூடிய ஆட்சிமுறை ஒன்றில் மத்திய சட்டவாக்கமைப்பு பெரும்பான்மைத்துவத்தின் மேலாதிக்கத்தின் கீழ் உறுதியாக நிலைநாட்டப்பட்டுள்ளது. இது மிகத் தெளிவான ஒரு இன ஒழிப்புத் திட்டமே.

ஆனால் எவரும் இதுவரை இதனைத் தடுத்து நிறுத்தவில்லை. பல ஆண்டுகளாக இந்தியாவும், சர்வதேச சமூகமும் இது தொடர்பாக எழுப்பிய கரிசனைகளை இலங்கை அரசாங்கம் ஏனைய நாடுகள் எவையும் தமக்கு அறிவுரை கூறவோ, வழிகாட்டவோ முடியாதென நாகரீகமடைந்த தேசங்களைக் கொண்ட சர்வதேச சமூகத்திற்கு பகிரங்கமாகவே பிரகடனம் செய்கிறது. இப்போக்கு தொடருமானால் திட்டமிட்டபடி அரசின் இன ஒழிப்பு வெற்றி பெறும். இத் தீவில் இருந்து தமிழர் என்ற மக்கள் இல்லாதொழிக்கப்படுவார்கள்.

இப் பொதுத் தேர்தல் முடிந்ததும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஓர் செயற் திட்டத்தை நடைமுறைப் படுத்தவுள்ளது.

. எமது மக்களின் ஜனநாயக ரீதியான ஆணையை அரசாங்கம் மதித்து தமிழ் மக்களின் இறையாண்மையை அங்கீகரிக்கக் கூடிய வகையில் ஆட்சி முறையை மீளக்கட்டியமைப்பதற்கான பேச்சுவார்த்தையை எம்முடன் நடாத்த வைப்பது முதலாவது கட்டம்.

கடந்த காலத்தைப் போல அரசாங்கம் எமது மக்களின் ஜனநாயக் ரீதியான ஆணையை தொடர்ந்து புறக்கணிக்குமானால் இவ்விடயத்தை நாம் நேரடியாக இந்தியாவிற்கும் சர்வதேச சமூகத்திற்கும் கொண்டு செல்வோம். தமிழ் மக்களுக்கெதிரான இவ்வின ஒழிப்புத் திட்டம் தொடர்பாக உரிய பார்வையைச் செலுத்தி பொருத்தமானதும் தாக்கமானதுமான நடவடிக்கை மேற்கொள்ள வலியுறுத்துவோம்.

இன்றைய பாணியிலேயே இலங்கை அரசு தமிழ் மக்களின் உரிமைகளுக்கு உரிய கௌரவம் வழங்காத ஆட்சிமுறையைத் தொடருமானால், தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை மீண்டும் வென்றெடுக்கத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்முறையற்ற காந்திய வழியிலான சட்டமறுப்பு சத்தியாக்கிரகப் போராட்டத்தை முன்னெடுக்கும். தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை தொடர்ந்தும் மறுக்கப்பட்டால்; அரசியல், பொருளாதார, சமூக, கலாசார விடயங்களில் தமிழ் மக்கள் நேரடியாக தங்களைத் தாங்களே ஆளுகை செய்வதைத் தடுத்தால்; தமிழ் மக்களுடைய சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதோடு சர்வதேச சமூகம் வேறு தீர்க்கமான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்று கோருவதற்கு வழி அமைப்பதாக இருக்கும்.

தமிழ் மக்களுடைய உடனடித் தேவைகளை சந்திப்பதற்கும் எமது அரசியல் இலக்கை அடைவதற்கும், தமிழ் மக்களுக்கிடையிலான ஐக்கியம் மிகவும் முக்கியமானதென்பதை நாங்கள் வலியுறுத்து கின்றோம். நான்கு பதிவு செய்யப்பட்ட கட்சிகளின் கூட்டமைப்பாக இருந்தபோதும் கடந்த பாராளுமன்றத்தில் அது பிளவுபடவோ அல்லது ஓர் உறுப்பினரேனும் வெளியேறாத ஒரே கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பேயாகும்.

எனினும் அன்றிலிருந்து தமிழ் பேசும் மக்களின் ஒன்றுபட்ட அரசியல் செல்வாக்கைப் பலவீனப்படுத்த வடக்குக் கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கெதிராக பெருமளவிலான சுயேச்சைக் குழுக்களை ஒழுங்கு செய்ததனூடாக கடும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இன்றைய அவசியத் தேவை எமது ஒற்றுமையை பாதுகாத்தலும் வெளிப்படுத்தலு மாகும். எமது மக்களையும் அவர்களின் நிலங்களையும் அழிப்பதற்கு அங்குலம் அங்குலமாக அரசு முன்னேறும் வேகத்தை நிறுத்துவதற்கான முதற்படி இதுவேயாகும். எமக்கிடையேயான ஒற்றுமையின்மையை வெளிக்காட்டும் நேரம் இது வல்ல. ஏனைய காலத்தை விட தமிழ், முஸ்லிம் உறவு தற்போது முக்கியமானது என்பதும் உண்மையே. அண்மைக்காலங்களில் தமிழ் பேசும் மக்கள் குறிப்பா[illegible] தமிழ் மற்றும் முஸ்லீம் மக்கள் இத்[illegible]கைய ஒற்றுமையின் முக்கியத்துவத்தை உணர்ந்துள்ளதுடன் இக் குறிக்கோளை நோக்கி தமிழ் முஸ்லீம் தலைமைகள் ஆக்கபூர்வமாக செயற்படுகின்றனர். இவ்வொற்றுமையை மேலும் உறுதியானதாக்கவும் நிலைநாட்டவும் நாம் ஈடுபாட்டுடன் செயற்படுவோம். வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லீம்களைத் திட்டமிட்ட வகையில் விரைவில் மீள்குடியேற்றுவதிலும் நாம் ஈடுபாட்டுடன் உள்ளோம்.

கௌரவமான மனிதர்கள் என்ற எமது தனித்துவமான அடையாளத்தினைப் பேணும் வகையில் எமது மக்களின் வாழ்வு மீள்கட்டியெழுப்பப்படும். நாங்கள் தனி மக்கள் என்ற வகையில் எமது உரிமைகளை மீண்டும் பெற்றுக் கொள்ள வேண்டும். எனவே இத் தே[illegible]தலில் இலங்கைத் தமிழ் அரசுக்கட்[illegible]யின் பெயரிலும் வீட்டுச் சின்னத்திலும் போட்டியிடும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு அனைவரும் வாக்களிப்பதன் மூலம் துணிச்சலுடன் எழுந்து எமது ஒற்றுமையை வெளிப்படுத்த வேண்டுமெனத் தமிழ்பேசும் மக்களைக் கோருகின்றோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

# தமிழ் தேசியத்திற்கான மக்கள் முன்னணி...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேச சக்திகளது விருப்பங்களை நிறைவேற்றுவதற்காக தாம் தயாரித்துள்ள அந்த தீர்வுத் திட்டத்தினை நியாயப்படுத்துவதற்காக அவர்கள் கூறும் காரணம்: சர்வதேசம் விரும்பும் தீர்வை தாம் முன்வைத்தால் அந்தத் தீர்வை இலங்கை அரசாங்கம் ஏற்க மறுக்கும் போது இனப்பிரச்சினை தீர்வுக்காக சர்வதேச சமூகம் வேறு வழிகளைக் கையாள வேண்டிய தேவை ஏற்படலாம் என்பதேயாகும். இவர் களது கூற்றுப்படி சர்வதேச சமூகம் எதிர்காலத்தில் தமிழ் மக்கள் மீது அக்கறை கொண்டு செயற்படவுள்ளது என்பது போன்ற தவறான நம்பிக்கையை ஏற்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

*சர்வதேச அரசியலை சரியாகக் கையாளல்*

உண்மையில் சர்வதேச நாடுகள் பிறிதொரு மக்கள் கூட்டத்தின் மீது அக்கறை கொண்டோ அல்லது அனுதாபத்தின் அடிப்படையிலோ முடிவெடுப்பதில்லை. மாறாக தமது நலன்களை முன்னிலைப்படுத்தியே முடிவெடுக்கின்றன. இவ்விடயம் சர்வதேச அரசியலை புரிந்து கொண்ட அனைவருக்கும் வெளிப்படையாக தெரிந்ததே. இவ்விடயம் த.தே.கூ ன் மூத்த தலைமைகளுக்கும் நன்றாகத் தெரியும். அவ்வாறு தெரிந்திருந்தும் தமிழ் மக்களின் நியாயமான அரசியல் உாிமைகளை பெற உதவுவதே சர்வதேச சக்திகளின் நோக்கமென கதைவிடுவது தமிழ் மக்களை ஏமாற்றும் ஓர் முயற்சியாகும்.

இலங்கை அரசாங்கத்தின் மீது அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டிய தேவை சர்வதேச சமூகத்திற்கு அதிகரித்து வருகின்றது. அதற்கு காரணம் ஸ்ரீலங்காவின் வெளிவிவகாரச் செயற்பாடுகள் சில வல்லரசு சக்திகளின் நலன்களுக்கு விரோதமான போக்கை கொண்டுளமையாகும்.

இவ்வாறான ஓர் சூழ்நிலையில் சர்வதேச சமூகமானது தமது பிராந்திய நலன்களைப் பாதுகாக்கும் நோக்கில் இலங்கை அரசு மீது அழுத்தங்களை பிரயோகிப்பதற்கு தமிழர்களது உரிமைப் போராட்டத்தை பயன்படுத்தும் சாத்தியம் உள்ளது. இதன் காரணமாகவே தமிழ் தேசியத்திற்கான மக்கள் முன்னணி தமிழ் மக்கள் தமது அடிப்டை கொள்கைகளை விட்டுக் கொடுக்காமல் உறுதியாக இருக்க வேண்டும் என வலியுறுத்துகின்றது.

அவ்வாறு உறுதியாக இருந்தாலே சர்வதேச சமூகம் தமது நலன்களை முன்வைத்து இலங்கை மீது அழுத்தங்களை பிரயோகிப்பதற்கு தமிழர்களது பிரச்சினையை கையில் எடுக்கும் பொழுது தமிழ் மக்களும் தமது நலன்களை அடைவதற்கு அதனைப் பயன்படுத்த முடியும்.

நிலைமை இவ்வாறு இருக்க தமிழ் தேசியக் கூட்டமைப்பானது கொள்கையை கைவிடும் நிலைப்பாட்டை எடுத்துள்ளதன் மூலம் தமிழ் மக்களின் நலன்களை தாரைவார்த்து சர்வதேச நாடுகள் தங்களது தேவைகளை மட்டும் பூர்த்தி செய்ய வாய்ப்பளிக்கும் கைங்கரியத்தினை மேற்கொள்கின்றது.

*விழிப்படைவோம்*

தமிழ் மக்களின் நலன்களை தாரை வார்க்க ஆயத்தமாகும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மூத்த தலைமைகளான இரா.சம்பந்தன், சுரேஸ் பிறேமச்சந்திரன், மாவை சேனாதிராஜா ஆகியோரின் செயற்பாடுகள் தமிழ் தேசத்தை பாரிய அரசியல் பின்னடைவுக்குள் தள்ளிவிடும் என்பதே உண்மையாகும். இந்த உண்மையை நாம் நேசிக்கும் எமது மக்களுக்கு இச்சந்தர்ப்பத்தில் தெளிவு படுத்த வேண்டியது நமது கடமையும், பொறுப்புமாகும்.

தமிழ்த்தேசியத்திற்கான
மக்கள் முன்னணி

கனவில் குடிக்கும் பாலை தகரக் குவளை யில் குடித்தால் என்ன? தங்கப் பாத்திரத் தில் குடித்தால் என்ன? ~ இந்தியா

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# யாழ்ப்பாண மக்களை அறிய ஏழு பிறப்பு எடுக்க வேண்டும்

2010 ஏப்ரல் 8 ஆம் திகதி நடைபெறப் போகும் பொதுத் தேர்தலில் யார் வெற்றி பெறுவர். யார் தோற்பர் என்ற எதிர்வுகூறல்கள் எதுவும் நமக்கு வேண்டியதில்லை.

இப்போதெல்லாம் எவர் அமைதியாகத் தானுண்டு தன் பணியுண்டு என வாழ்கிறார்களோ அவர்களைத்தான் மக்கள் சமூகம் ஓரளவேனும் மதிக்க முற்படுகின்றது.

இந்நிலை யாழ்ப்பாணத்தில் மிக உச்சம் எனலாம். யாழ்ப்பாண மக்களைப் பற்றி அறிந்து கொள்வதெனில் அதற்கு ஒரு ஆயுள்காலம் போதாது.

குறைந்தது ஏழு பிறப்பெடுத்தால் மட்டுமே யாழ்ப்பாண மக்களின் தன்மையைத் புரிந்து கொள்ள முடியும். சில வேளை ஏழாவது பிறப்பிலும் இது சாத்தியமாகாது போகலாம்.

இதற்கு நல்ல உதாரணம், நடைபெறப் போகும் பொதுத் தேர்தல். யாழ்.மாவட்ட நாடாளுமன்றத் தேர்தலில் ஏகப்பட்டவர்கள் அரசியல் கட்சி என்ற நிலையிலும், சுயேட்சைக் குழுக்கள் என்ற அடிப்படையிலும் போட்டியிடுகின்றனர்.

இதில் வேடிக்கை என்னவெனில் போட்டியிடும் ஒவ்வொரு அரசியல் கட்சிகளும், சுயேட்சைக் குழுக்களும் தங்களுக்கு நாடாளுமன்ற ஆசனம் கிடைக்கும் என வெளிப்படையாகக் கூறிக் கொள்கின்றன.

யாழ்ப்பாண மக்கள் யாரைக் கண்டாலும் உங்களுக்குத்தான் எங்கள் வாக்கு என்று கூறிக் கொள்வது கூட இவ்வாறு அவர்கள் நம்புவதற்குக் காரணமாகலாம்.

யாழ்ப்பாண மக்களைப் பொறுத்தவரையில் அவர்கள் யாரையும் முகம் முறித்துப் பேச மாட்டார்கள். தங்கள் வீட்டிற்கு எந்த வேட்பாளர் வந்தாலும் வாருங்கள், இருங்கள், உங்களை சற்று முன்பும் நினைத்தோம், ஏகப்பட்டவர்கள் உங்களைத்தான் ஆதரிக்கின்றார்கள்.

உங்களை நாடாளுமன்றத்திற்கு அனுப்பினால்தான் எங்கள் பிரச்சினை தீரும் என்று என்னுடைய கந்தோரிலும் கதைத்தார்கள்.

நூற்றுஐம்பது வாக்குகளைக் கூட பெற முடியாத வேட்பாளருக்கு எங்கள் வாக்காளப் பெருமக்கள் சொல்லும் கதைதான் இது.

வாக்காளரும் வேட்பாளரும் சந்தித்தால் நடைபெறும் சம்பாஷணையாக இது இருந்தால், வாக்காளரும், வாக்காளரும் சந்தித்தால் எப்படி கதைப்பார்கள் தெரியுமா?

போட்டியிடும் வேட்பாளரின் பெயரைக் குறிப்பிட்டு இவரும் எலக்ஷன் கேட்கின்றார் என்று கூறி ஒரு சில விரசக் கதைகளும் சொல்லி சிரித்து மகிழ்வர்.

எப்படி இருக்கின்றது நிலைமை? கற்பனை சாகரத்தில் வேட்பாளர்கள். வயிறு குலுங்கச் சிரிக்கின்றார்கள் வாக்காளர்கள். நீங்களும் கேட்டிருக்கலாமே என்று சிரிப்பின் உச்சத்தில் சொல்லி மகிழ்கின்றார்கள்.

இந்த மகிழ்வை மட்டுமே எங்கள் வேட்பாளர்களால் கொடுக்க முடியும். அதுபோதுமையா, தோற்றாலும் பரவாயில்லை.

# வாக்காளர் அட்டை விநியோகிக்கும் தினங்களில் தபாலகங்கள், தபாற்காரர்களுக்கு பாதுகாப்பு

## பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்படும் தினங்களில் சகல தபாலகங்களுக்கும் தபால்காரர்களுக்கும் முழுமையான பாதுகாப்பு வழங்கப்படும் என்று தேர்தல்களுக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் காமினி நவரட்ன நேற்று முன்தினம் தெரிவித்தார்.

எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரையும் நாடு பூராகவும் வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப் படவுள்ளன. இதன் நிமித்தமே இப்பாதுகாப்பு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை சட்ட விரோத சுவரொட்டிகள், பதாகைகள், பனர்கள் என்பவற்றை இன்றைக்குள் முழுமையாக அகற்றுவதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

குறிப்பாக வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கவென தபால்காரர்கள் செல்லும் ஒவ்வொரு வீதியிலும் பொலிஸார் விஷேட பாதுகாப்பு மற்றும் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுவர்.

இப்பணியில் அவ்வப் பிரதேச பொலிஸ் நிலைய பொலிஸார் முழுமையாக ஈடுபடுத்தப்படுவர்.

இதேநேரம் எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வாக்காளர் அட்டைகள் விஷேடமாக விநியோகிக்கப்படும். அத்தினத்தில் வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக் கொள் ளுவதில் மக்கள் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என்றாலும் 22 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் வாக்காளர் அட்டையைப் பெற்றுக்கொள்ளத் தவறுகின்றவர்கள் அருகிலுள்ள தபாலகங்களுக்குச் சென்று தங்களது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தி வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

இதேவேளை சட்டவிரோத சுவரொட்டிகளையும் பதாகைகளையும் பனர்களையும் அகற்றும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கு வேட்பாளர்களதும் பொது மக்களினதும் ஒத்துழைப்பையும் கோரியுள்ளோம் என்று மேலும் தெரிவித்துள்ளார். (2-6)

# ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் அறிவிக்கப்பட்ட சம்பள உயர்வு இதுவரை வழங்கப்படவில்லை

## தொழிற்சங்கங்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் அறிவிக்கப்பட்ட சம்பள உயர்வு இதுவரையில் வழங்கப்படவில்லை என தொழிற்சங்கங்கள் விசனம் வெளியிட்டுள்ளன.

அரசாங்க ஊழியர்களுக்கு 2 ஆயிரத்து 500 ரூபா சம்பள உயர்வு வழங்குவதாக ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் அறிவிக்கப்பட்ட போதிலும் தற்போது அந்த வாக்குறுதி தொடர்பில் ஆளும் கட்சி அமைச்சர்கள் மௌனம் காத்து வருவதாக அத் தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

இதற்கமைய சம்பள உயர்வு உரிய முறையில் வழங்கப்படாவிட்டால் நடவடிக்கை எடுக்க நேரிடும் என்றும் அத்துடன் தபால் மூல வாக்கெடுப்பிற்கு முன்னதாக சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டாமெனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் சம்பள அதிகரிப்பு வழங்குவது தொடர்பில் எதிர்க்கட்சிகளும் கேள்வி எழுப்பாமை பெரும் ஏமாற்றமளிப்பதாக தொழிற்சங்கங்கள் மேலும் குறிப்பிட்டுள்ளதாக செய்திகள் தெரிவித்துள்ளன. (2-6)

# வெளிநாடுகளினால் இலங்கைக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாது

## பேராசிரியர் ராஜிவ விஜேசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

வெளிநாடுகளினால் இலங்கைக்கு எதிராக மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்த முடியாது என மனித உரிமைகள் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் ராஜிவ விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

2009 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடைபெற்ற இறுதிக் கட்ட யுத்தத்தின் போது மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றதாக குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன.

எனினும் இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இலங்கையிடம் உலக நாடுகள் விசாரணை நடத்த முடியாது எனவும் அதற்கான எவ்வித சட்டப் பின்னணியும் கிடையாது எனவும் மேலும் நாடுகள் அமைப்போ அல்லது ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையோ இலங்கைக்கு எதிராக விசாரணை நடத்தக் கூடிய அதிகாரத்தில் இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஜீ.எஸ்.பி. சலுகைத் திட்டம் இடைநிறுத்தப்பட்டதனால் பாரியளவு பாதிப்புக்கள் ஏற்படக் கூடிய சாத்தியமில்லை என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (2-6)

# தற்போது நிலவும் வரட்சியால் டெங்கு நுளம்புகள் அதிகரிக்கும் அபாயம்

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் தற்போது நிலவும் வரட்சியான காலநிலை காரணமாக டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்கள் அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டின் பல பிரதேசங்களில் நிபுணர்கள் குழு மேற்கொண்ட ஆய்வின் போது இந்த விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளதாக தொற்றுநோய் ஆய்வுப் பிரிவின் பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் 9 ஆயிரத்துக்கும் அதிகமானோர் டெங்குநோய் தொற்றுக்குள்ளாகியுள்ளமை அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் இந்த நிலைமை அதகரித்துச் செல்வதைத் தொடர்ந்தும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளதெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இது குறைவடைந்ததாக கூறமுடியாதெனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். டெங்குக் காய்ச்சல் பரவுதல் நாட்டின் பிரதான சுகாதார பிரச்சினையாகக் காணப்படுவதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும் எனத் தெரிவித்த அவர், தற்போதைய வரட்சியான காலநிலை நீடிக்குமானால் டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகும் வேகம் அதிகரிக்கக்கூடும் என அந்தப் பகுதிக்கு விஜயம் செய்த நிபுணர்கள் குழு தெரிவித்ததாக அவர் கூறினார்.

இந்த நிலைமையைத் தடுப்பதற்கு தமது வீட்டின் சுற்றாடலை சுத்தமாக வைத்திருப்பதற்கு வீட்டின் உரிமையாளர்கள் கவனம் செலுத்தவேண்டும் என பணிப்பாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (2-4)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## மதமும் ஒழுக்கமும்



நீ உண்மையில் தூய்மையுள்ளவனாக இருந்தால் தூய்மை இல்லாததை நீ எப்படிப் பார்க்க முடியும்? ஏனென்றால், உனக்குள்ளே இருப்பதுதான் உனக்கு வெளியிலேயும் இருக்கிறது. நமக்குள்ளேயே அசுத்தம் இல்லாவிட்டால், அதை நாம் வெளியில் பார்க்க முடியாது. இந்த உண்மை வேதாந்தத்தின் அனுஷ்டானப் பகுதிகளில் ஒன்றாக விளங்குகிறது. வாழ்க்கையில் இந்தக் கருத்தை ஏற்று நடத்த நாம் அனைவரும் முயற்சி செய்வோம் என்று நான் நம்புகிறேன்.

'உன்னிடமுள்ள தெய்வீகத் தன்மைதான், கடவுள் என்ற ஒருவர் இருக்கிறார்' என்பதற்கு உரிய சான்றாகும். நீ ஒரு தீர்க்கதரிசியாக இல்லாவிட்டால் கடவுளைப் பற்றிய எந்த உண்மையும் ஒரு போதும் இருந்திருக்க முடியாது. நீ கடவுளாக இல்லாவிட்டால், கடவுள் என்ற ஒருவர் இருக்கவில்லை, இனி இருக்கப்போவதும் இல்லை-இந்த உண்மையே வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய இலட்சியம் என்று வேதாந்தம் சொல்லுகிறது.

## பிரசாரத்திற்கு செலவிடும் பணத்தைக் கொண்டு அமைச்சர்களின் ஊழல்களை கண்டறியலாம்

### பாடலி சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடும் அமைச்சர்கள் பிரசாரத்திற்காக செலவிடும் பணத்தை அடிப்படையாகக் கொண்டு அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட ஊழல்களை கண்டறியலாம் என சுற்றாடல் அமைச்சர் பாடலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

சில அமைச்சர்கள் 300 மில்லியனுக்கும் அதிகமாக பிரசாரப் பணிகளுக்காக செல விடுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அமைச் சர்களின் மாதச் சம்பளம் 54 ஆயிரம் ரூபாய் மட்டுமே என்றும் குறிப்பிட்டு ள்ளார்.

இவ்வாறான ஓர் பின்னணியில் அவர்கள் எவ்வாறு பாரியளவு பணத்தை பிரசாரப் பணிக்ளுக்காக செலவிட முடியும் என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதற்கமைய ஆறு வருட ஆட்சிக் காலத்தில் அமைச்சர்களினால் மொத்தமாக 3.8 மில்லியன் ரூபாயினை மட்டுமே நேர்மையாக உழைக்க முடியும் என சுட்டிக்காட்டியுள்ளார்.

அமைச்சர்கள் எங்கிருந்து தேர்தல் பிரசாரத்திற்காக பாரியளவு பணத்தை செலவிடுகின்றனர் என்பது கேள்விக்குறியே என தெரிவித்துள்ளார். மேலும் இதன் காரணமாகவே அமைச்சர்கள் தங்களது வருமான மூலங்களை வெளிப்படுத்த தயங்கி வருவதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (2-6)

## பொலிஸாரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் வர்த்தகர் பலி–திருகோணமலையில் சம்பவம்

(கொழும்பு)

திருகோணமலையில் பொலிஸார் தவறுதலாக மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் வர்த்தகர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட நபர் ஒருவரை கைது செய்யும் நோக்கில் திருகோணமலை, மஹாமாயாபுர பிரதேசத்தில் உள்ள வீடொன்றிற்கு சென்ற பொலிஸாருக்கும் வீட்டு உரிமையாளருக்கும் இடையில் நடைபெற்ற பரஸ்பர துப்பாக்கிப் பிரயோகத்தில் வர்த்தகர் உயிரிழந் துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள் ளது.

இது பற்றி தெரிய வருவதாவது,

சந்தேக நபரை தேடிச் சென்ற பொலிஸார் தவறுதலாக வேறு ஓர் வீட்டிற்குச் சென்றதாகவும் அந்நேரம் கொள்ளையர்கள் தமது வீட்டை ஆக்கிரமித்துள்ளதாக எண்ணிய வீட்டு உரிமையாளர் பொலிஸார் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியுள்ளதாகவும் இதன் போதே பொலிஸாரினால் இந்த துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனையடுத்து இந்தத் துப்பாக்கிப் பிரயோக தாக்குதலில் வீட்டு உரிமையாளர் உயிரிழந்துள்ளதுடன் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் காயமடைந்துள்ளார் எனவும் காயமடைந்த பொலிஸார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக வேறு ஓர் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

## ஏனைய இனங்களுக்கு இருக்கக்கூடிய வாய்ப்பு எமக்கு இருக்கக் கூடாதா?

### கண்டியில் போட்டியிடுவது தொடர்பில் மனோ கணேசன்

(கண்டி)

கடந்த பாராளுமன்றத்தில் கண்டி மாவட்டத் திலிருந்து தெரிவுசெய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒன்பது பேர் சிங்களவர்கள், மூவர் முஸ்லிம்கள். எமது சகோதர இனத்தவர்கள் தங்கள் பிரதிநிதித்துவங்களை தக்கவைத்து கொள்வதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

ஆனால் இந்த உரிமை ஏன் எமக்கு இல்லை என்பது தான் எனது கேள்வி. ஏனைய சகோதர இனத்தவர்களுக்கு இருக் கின்ற அதே உரிமையும். வாய்ப்பும் எமக்கு இருக்கவும் கிடைக்கவும் கூடாதா என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் கேள்வியெழுப்பியுள்ளார்.

நேற்று முன்தினம் கண்டி பன்விலை சோழ கந்தை தோட்டத்தில் இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் அமைப்பாளர்கள் மத்தியில் உரையாற்றி அவர் தெரிவித்த கருத்து தொடர்பில் ஜனநாயக மக்கள் முன்னணி விடுத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கொழும்பு, நுவரெலியா, பதுளை ஆகிய மூன்று மாவட்டங்களிலிருந்தும் தமிழ் பாராளுமன்ற பிரதிநிதித்துவங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் அரசியல் அறிவும் நாகரிகமும். கொண்ட கண்டி தமிழ் சமூகத்தினரால் ஏன் தங்களது சொந்த இனத்து பிரதிநிதியை நாடாளுமன்றத்திற்கு அனுப்ப முடியவில்லை என்ற கேள்வி இன்று எமது முயற்சியினால் கண்டி மாவட்டம் முழுக்க எதிரொலிக்கின்றது.

1994 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலிலேயே தமிழர் ஒருவர் கண்டி மாவட்டத்தில் கடை சியாக தெரிவுசெய்யப்பட்டார்.

அதற்குபிறகு 2000 ஆம் 2001 ஆம் 2004 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற மூன்று பாராளுமன்ற தேர்தல்களிலும் போட்டியிட்ட அனைத்து தமிழர்களும் தோல்வியடைந்தார்கள். இதற்கான காரணங்கள் எவை என்பதை நாங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

கடந்த தேர்தல்களை எடுத்துக் கொண்டால் மூன்று பிரதான காரணங்களால் தமிழ் பிரதிநிதித்துவங்க்ள் கண்டி மாவட்டத்தில் பறிபோயுள்ளன.

முதலாவது காரணம் தேர்தல்காலங்களிலே தமிழர்கள் சுதந்திரமாக வாக்களிப்பதும் தமிழ் வேட்பாளர்கள் தமது ஜனநாயக பிரசாரங்களை முன்னெடுப்பதும் கண்டி மாவட்டத்தின் சில பிரதேசங்களிலே தடுக்கப்பட்டுள்ளன.

இரண்டாவது காரணம் நடைமுறையில் உள்ள விகிதாசார தேர்தல் முறையின் கீழ் தமிழ் வாக்காளர்கள் தங்களது விருப்பு வாக்குகளை எந்த வேட்பாளருக்கு வழங்குகின்றோம் என்பதில் எச்சரிக்கையுடனும் கவனத்துடனும் நடந்து கொள்ளாதது ஆகும்.

மூன்றாவது காரணம் வாக்காளர்களாக பதிவு செய்யப்பட்ட தமிழர்களில் கணிசமானோர் தேர்தல்காலங்களிலே வாக்களிப்பதில் அக்கறை காட்டாதது ஆகும்.

ஆகவே மேற்கண்ட குறைபாடுகளை அகற்றி 1994 ஆம் ஆண்டிற்கு பிறகு காணாமல் போய் விட்ட கண்டி மாவட்ட தமிழ் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை மீட்டெடுப்பதுதான் எனது முதன்மை குறிக்கோளாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

## விருப்பு வாக்கு மோதல்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவும்

### கண்காணிப்பு அமைப்புகள் கோரிக்கை

(கொழும்பு)

விருப்பு வாக்கு மோதல்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் கட்சித் தலைவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

அநேக சந்தர்ப்பங்களில் விருப்பு வாக்குகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் ஒரே கட்சியைச் சேர்ந்த வேட்பாளர்களும் ஆதரவாளர்களும் மோதிக் கொள்ளும் சந்தர்ப்பம் உயர்வடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

50வீதத்திற்கும் அதிகமான முறைப்பாடுகள் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களினால் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட மோதல்களாக காணப்படுகின்றனவென பவ்ரல் மற்றும் சீ.எம்.ஈ.வீ. அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள் ளன.

இதேவேளை தேர்தல் வன்முறைகள் தொடர்பில் 66 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் இதில் 35 வீதமான முறைப்பாடுகள் ஒரே கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் காவல் துறையினர் தகவல் வெளியிட்டுள்ளனர். (2-6)

### கிளி. செஞ்சிலுவைச்சங்க கிளையை மீள இயக்குவதற்கான நடவடிக்கை

கடந்த போர்க்கால நடவடிக்கையால் செயற்படாதிருந்த கிளிநொச்சி மாவட்ட செஞ்சிலுவைச்சங்க கிளையை மீண்டும் புனரமைத்து இயங்குவதற்கான நடவடிக்கைகளை இலங்கை செஞ்சிலுவைச்சங்க தலைமையகம் மேற்கொள்ளவுள்ளதாக தெவிக்கப்படுகிறது.

இதில் கிளிநொச்சி மாவட்ட செஞ்சிலு வைச் சங்க கிளைக் கான இடைக்கால நிர்வாகத்தை தெரிவுசெய்வதற்கு செஞ்சிலுவைச்சங்க தலைமையகம் கிளி நொச்சி அரசாங்க அதிபரிடம் 10 பேர்களுடையபெயர் விபரங் களை கேட்டிருந்தது. இற்றைய பெயர் விபரங்களை அனுப் பிவைக்கப் பட்டுள்ளதாக வும் இதில் 5பேர் இடைக் காலநிர்வாகசேவைக்கு தெரிவுசெய்யப் படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-134)





யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டியில் விருந்தினர்கள் மைதானத்திற்கு அழைத்து வரப்படுவதையும் இடைவேளையின் போது இடம்பெற்ற மாணவிகளின் உடற் பயிற்சிக் கண்காட்சியையும் படங்களில் காணலாம்.


முதலாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் ✿ 05 ✿ 04 ✿ 1992



விண்ணில் ✿ 15 ✿ 03 ✿ 2009

அமரர் அன்ரன்ரூபராஜ் அன்ரன் ஜெறாட்

வையகம் போற்ற மூத்த மகனாய் வந்துதித்து
பாசம் என்னும் பறவைக் கூட்டினிலே
அன்பு மொழி பேசி பாசத்தை பொழிந்தவனே
கண்ணிமைக்கும் பொழுதினிலே எமைவிட்டு சென்றாயோ!

இல.84,
திருநகர் வடக்கு,
கிளிநொச்சி.

கனக்கும் இதய சோகங்களுடன்
குடும்பத்தினர்.

(880)





போரினால் சிதைக்கப்பட்ட தாயகத்தின் இயற்கை வளங்கள் அபிவிருத்தியின் பெயராலும் சூறையாடப்பட்டுவருகின்றது

இந்நிலையில்,

தமிழ்த் தேசிய அரசியலில் ஒரு சூழலியலாளனும் தேவை!

பொ.ஐங்கரநேசன் Msc, PGDJMC

இலங்கைத் தமிழரசுக் கட்சி

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

வாக்களிப்போம்! மற்றவர்களையும் வாக்களிக்க வைப்போம்!!

பழைய மாணவர்கள்–யூனிவேர்சல்

2 ✕ ✕

# வாஸ் மிரட்டல்; சென்னை பணிந்தது டெக்கான் சார்ஜர்ஸ் அணி வெற்றி

(சென்னை)

சமிந்த வாஸின் துல்லியமான பந்து வீச்சின் மூலம் டெக்கான் சார்ஜர்ஸ் அணி 31 ஓட்டங்கள் வித்தியாசத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியை வீழ்த்தியது.

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) அமைப்பின் மூன்றாவது இருபது-20 கிரிக்கெட் தொடரில் நேற்று சென்னையில் நடைபெற்ற ஐந்தாவது லீக் போட்டியில் தோனி தலைமையிலான சென்னை சுப்பர்கிங்ஸ் அணியும் கில்கிறிஸ்ட் தலைமையிலான டெக்கான் சார்ஜர்ஸ் அணியும் மோதின.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய டெக்கான் சார்ஜர்ஸ் அணிக்கு கில்கிறிஸ்ட்-லக்ஸ்மன் ஜோடி சிறப்பான ஆரம்பத்தை வழங்கினர்.

இந்த ஜோடி முதலாவது விக்கெட்டுக்காக 4.4 ஓவர்களில் 55 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்த போது அணித்தலைவர் கில்கிறிஸ்ட் 17 பந்துகளில் (4 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் அடங்கலாக) 38 ஓட்டங்களுடனும் வி.வி.எஸ்.லக்ஸ்மன் 12 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

அடுத்து மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த கிப்ஸ்-சைமண்ட்ஸ் ஜோடி சிறப்பான இணைப்பாட்டத்தை வழங்க டெக்கான் சார்ஜர்ஸ் அணி 12.1 ஓவர்களில் 100 ஓட்டங்களை எட்டியது.

இதில் அன்ரூ சைமண்ட்ஸ் 43 பந்துகளில் தனது அரைச்சதத்தை பூர்த்தி செய்து அசத்தினார் எனினும் மறுமுனையில் கிப்ஸ் 36 பந்துகளில் (5 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 45 ஓட்டங்களை எடுத்து ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்த றோகித் சர்மா களமிறங்க மறுமுனையில் அன்ரூ சைமண்ட்ஸ் 43 பந்துகளில் (3 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் அடங்கலாக) 50 ஓட்டங்களை எடுத்து ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்தார்.

இந்நிலையில் டெக்கான் சார்ஜர்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 190 ஓட்டங்களைக் குவித்தது.

இதில் றோகித் சர்மா 10 பந்துகளில் (2 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 19 ஓட்டங்களையும் ரி.சுமன் 5 பந்துகளில் (2 பவுண்டரிகள் அடங்கலாக) 10 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்துவீச்சில் அஸ்வின் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார். பதிலுக்கு 20 ஓவர்களில் 191 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு ஆரம்பத்திலேயே பந்து வீச்சின் மூலம் அதிர்ச்சி கொடுத்தார் சமிந்த வாஸ்.

ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் முரளி விஜய் 03, சுரேஸ் ரெய்னா 06, ஹைடன் 17 ஓட்டங்களுடன் வாசின் பந்துவீச்சிலும் பத்திரிநாத் 05 ஓட்டங்களுடன் ஓஜாவின் பந்துவீச்சிலும் அடுத்தடுத்து ஆட்டமிழந்து வெளியேற சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 5.3 ஓவர்களில் 32 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 4 விக்கெட்டுக்களை இழந்தது.

இந் நிலையில் 5ஆவது விக்கெட்டுக்காக இணைந்த கேம்ப், தோனி ஜோடி சிறப்பான இணைப்பாட்டத்தை வழங்கி அணியை சரிவிலிருந்து மீட்டனர்.

இந்த ஜோடி 4.3 ஓவர்களில் 38 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்தபோது கேம்ப் 16 பந்துகளில் (ஒரு பவுண்டரி, ஒரு சிக்ஸர் அடங்கலாக) 22 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய மோர்கல் சிறப்பாகத் துடுப்பெடுத்தாட சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 14.1 ஓவர்களில் 100 ஓட்டங்களை எட்டியது.

எனினும் அணித்தலைவர் தோனி 29 பந்துகளில் (3 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 42 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த அஸ்வின் பூச்சியத்துடனும் பாலாஜி 15 ஓட்டங்களுடனும் முரளிதரன் ஒரு ஓட்டத்துடனும் ஆட்டமிழந்து ஏமாற்ற சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களையிழந்து 159 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 31 ஓட்டங்கள் வித்தியா சத்தில் தோல்வியடைந் தது.

இதில் அல்பி மோர்கல் 26 பந்துகளில் (ஒரு பவுண்டரி, 3 சிக்ஸர்கள் அடங்கலாக) 42 ஓட்டங்களையும் தியாகி 03 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்துவீச்சில் சமிந்தவாஸ் 4 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவர் உட்பட 21 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் பிரஜன் ஓஜா, அன்ரூ சைமண்ட்ஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் 2 புள்ளிகளைப் பெற்ற டெக்கான் சார்ஜர்ஸ் அணி தொடரில் முதல் வெற்றியை பதிவு செய்தது.

இப்போட்டியில் டெக்கான் சார்ஜர்ஸ் அணியின் வெற்றிக்கு திருப்புமுனையமைத்த சமிந்தவாஸ் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

# மனோஜ் திவாரி-ஹோட்ஜ் அதிரடி கொல்கத்தா நைட் ரைடர்ஸ் வெற்றி

(கொல்கத்தா)

ஹோட்ஜ்-திவாரியின் அதிரடியான ஆரம்பத்தின் மூலம் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி பெங்களூர் றோயல்ஸ் சலஞ்ஜர்ஸ் அணியை 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் இலகுவாக வீழ்த்தியது.

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) அமைப்பின் மூன்றாவது இருபது-20 கிரிக்கெட் தொடர் இந்தியாவில் நடைபெற்று வருகிறது.

இதில் நேற்று நடைபெற்ற 4ஆவது லீக் போட்டியில் கங்குலி தலைமையிலான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும் கும்ளே தலைமையிலான பெங்களூர் றோயல்ஸ் சலஜ்ஜர்ஸ் அணியும் மோதின.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணித்தலைவர் கங்குலி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் றோயல் அணி ஆரம்பத்தில் தடுமாறியது.

ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் கோஸ்சுவாமி 08 ஓட்டங்களுடனும் பாண்டி பூச்சியத்துடனும் ஹோலி 02 ஓட்டங்களுடனும் மோர்கன் 10 ஓட்டங்களுடனும் அடுத்தடுத்து ஆட்டமிழக்க பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி 7.2 ஓவர்களில் 35 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 4 விக்கெட்டுக்களையிழந்தது.

எனினும் ஒரு முனையில் விக்கெட்டுக்கள் பறிபோனதும் மறுமுனையில் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் ஜக்கலிஸ் பொறுப்புடன் துடுப்பெடுத்தாடினார்.

இந்நிலையில் 5 ஆவது விக்கெட்டுக்காக் இணைந்த கலிஸ்-டிராவிட் ஜோடி சிறப்பாக ஆடி அணியை சரிவிலிருந்து மீட்டனர்.

இதில் ராகுல் ராவிட் 16 பந்துகளில் (3 பவுண்டரிகள் அடங்கலாக) 21 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய உத்தப்பா சிறப்பாகத் துடுப்பெடுத்தாட பெங்களூர் றோயல் சலஜ்சர்ஸ் அணி 16.2 ஓவர்களில் 100 ஓட்டங்களை எட்டியது.

மறுமுனையில் நிலைத்து நின்று துடுப்பெடுத்தாடிய ஜக்கலிஸ் 47 பந்துகளில் அரைச்சதத்தைக்கடந்தார். எனினும் றொபின் உத்தப்பா 17 பந்துகளில் (ஒரு பவுண்டரி அடங்கலாக) 20 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

இந்நிலையில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களையிழந்து 135 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ஜக்கலிஸ் 52 பந்துகளில் (7 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர்கள் அடங்கலாக) 65 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் எடுத்தார்.

பந்துவீச்சில் அஞ்சலோ மத்யூஸ் 4 ஓவர்கள் பந்துவீசி 19 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் முரளி கார்த்திக் 2 விக்கெட்டுக்களையும் லாங்வெல்ட்த் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 136 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்கு ஹோட்ஜ்-திவாரி ஜோடி அதிரடியான ஆரம்பத்தை வழங்கினர்.

இதில் திவாரி 28 பந்துகளில் அரைச்சதத்தைக்கடக்க கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 11.3 ஓவர்களில் 100 ஓட்டங்களை எட்டியது.

எனினும் மனோஜ் திவாரி 29 பந்துகளில் (6 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 50 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து அணித்தலைவர் கங்குலி களமிறங்க மறுமுனையில் அரைச்சதம் கடந்த ஹோட்ச் 45 பந்துகளில் (7 பவுண்டரிகள் அடங்கலாக) 50 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து புஜார களமிறங்க மறுமுனையில் அணித்தலைவர் கௌரவ் கங்குலி 22 பந்துகளில் ஒரு பவுண்டரி, ஒருசிக்ஸர்கள் அடங்கலாக) 23 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

எனினும் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி 19.2 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 136 ஓட்டங்களை எடுத்து 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் இலகுவாக வென்றது.

இதில் புஜார 05 ஓட்டங்களையும் ஷா 02 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர். பந்துவீச்சில் வான்டேர் மேர்வ் 2 விக்கெட்டுக்களையும் பிரவீண்குமார் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ்வெற்றியின் மூலம் 2 புள்ளிகளைப் பெற்ற கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி தொடரில் இரண்டாவது வெற்றிகளுடன் 4 புள்ளிகளைப்பெற்றுள்ளது.

இப்போட்டியில் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியின் வெற்றிக்கு வழியமைத்த மனோஜ் திவாரி ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

# பாதுகாப்பை மீறியதாக யுவராஜ் மீது சர்ச்சை

(சண்டிகார்)

கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணியின் நட்சத்திர வீரர் யுவராஜ் மற்றும் வி.ஆர்.சிங் இருவரும் பாதுகாப்பை மீறி ஹோட்டலை விட்டு வெளியே சென்றது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.


சண்டிகாரில் நடந்த மூன்றாவது ஐ.பி.எல். இருபது-20 தொடரில் லீக் போட்டியில் பஞ்சாப், டில்லி அணிகள் மோதின.

இதில் பங்கேற்ற வீரர்கள் சண்டிகாரில் உள்ள மவுண்ட்வியூ ஹோட்டலில் தங்கியிருந்தனர். இங்கிருந்து யுவராஜ் காரில் தனது வீட்டுக்குச் சென்றுள்ளார். வி.ஆர்.சிங் எங்கு சென்றார் என்றே தெரியவில்லை இவர்கள் மீது ஐ.பி.எல். நிர்வாகத்திடம் புகார் தரப்பட்டுள்ளது.

**மீண்டும் மீறல்**

கடந்த நவம்பரில் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் போட்டியில் பங்கேற்ற இந்திய வீரர்கள் இந்த ஹோட்டலில் தான் தங்கியிருந்தனர். அப்போதும் யுவராஜ், தோனி, ஹர்பஜன் ஆகியோர் பொலிஸார் அனுமதியில்லாமல் சென்றதாக புகார் தரப்பட்டுள்ளது.

பயங்கரவாதிகள் மிரட்டல் இருக்கும் நிலையில் வீரர்கள் இப்படி பாதுகாப்பு இல்லாமல் வெளியில் செல்வது சிக்கலை ஏற்படுத்தலாம்.





கீரிமலை அருள்மிகு சிறி நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வர ஆலய தீர்த்தோற்சவத்தில் சுவாமி வீதியுலா வருவதையும் பக்தர்கள் தீர்த்தமாடுவதையும் படங்களில் காணலாம். படங்கள்:-சுதாகர்

## உதவித் திட்டங்களைக்...

சபையின் மனிதாபிமான அமைப்பின் உதவியுடன் இயங்கி வரும் ஷாப் உதவி நிறுவன அமைப்பு கடந்த ஜனவரி மாதம் ஜெனீவாவில் உள்ள அதன் அலுவலகத்திடம் உதவி கேட்டு விண்ணப்பித்திருந்த போதும் இது வரை உதவிகள் எவையும் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் பயனற்றவை என மனிதாபிமான அமைப்புக்கள் எண்ணுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. எனவே மீண்டும் நிதியுதவி கோரி விண்ணப்பிப்பதை உதவி அமைப்புக்கள் தவிர்த்துள்ளன.

உதவி நிறுவனங்களுக்கு நிதியுதவிகளை வழங்கி வரும் மேற்குலக நாடுகள் தமது உதவிகளை முற்றாக நிறுத்தும் கட்டத்திற்கு வந்துள்ளதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக உதவி அமைப்பின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

குடிநீர் விநியோகங்களை மேற்கொள்ளும் தண்ணீர் வண்டிகளின் எண்ணிக்கையும் கடந்த மாத இறுதியுடன் 50 வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

## அனோமா...

லங்கா ஈ நியூஸ் செய்தி இணையத்தளத்திற்கு செய்தி வழங்கும் சுதந்திர ஊடகவியலாளர் பிரகீத் எக்மலிகொட தொடர்பாகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆட்கொணர்வு மனுவை எதிர்வரும் 27 ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளவுள்ளது.

அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு கோரி அவரது மனைவி மற்றும் பிள்ளைகள் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளனர். (ச-3)

## கிளிநொச்சியில்...

அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் நாட்டின் சில பகுதிகளுக்குச் சென்று தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட முடியாமல் தடுக்கப்படுகின்றனர்.

அதிலும் குறிப்பாகக் கிளிநொச்சிப் பகுதியில் அரசியல் கட்சிகள் வீடுவீடாகச் சென்று பிரசாரம் செய்வதற்குக் கூட ஒவ்வொரு நாளும் இராணுவத்தினரின் அனுமதியைப் பெற வேண்டிய நிலை உள்ளது என்றும் அந்த அமைப்புக் கூறுகின்றது.

தேர்தல் சட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் எவ்விதமான சட்ட அமுலாக்கமும் இலங்கையில் இருப்பதாகத் தங்களுக்குத் தெரியவில்லை என்றும் கபேயின் இயக்குநர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்தார். (ச-3,5)

## தமிழ்க் கூட்டமைப்பு மீது...

யீட்டை நாடுவதன் மூலம் இத்தகைய நடவடிக்கைகளில் இறங்கியிருக்கின்றார்கள் எனவும் அவர் கூறினார். பொதுத் தேர்தலுக்கான தேர்தல் விஞ்ஞாபனத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாழ்ப்பாணத்தில் வெளியிட்டது.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அவர், தமிழ் தாயகக் கோட்பாட்டின் அடிப்படையிலான உள்ளக சுயாட்சியை வலியுறுத்தி எதிர்வரும் தேர்தலில் மக்கள் ஆணையைப் பெறும் முயற்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இறங்கியுள்ளது.

தமிழ் கடும்போக்காளர்களாக இருக்கும் இவர்கள், சர்வதேச சமூகத்தைக் கொண்டு வர முயல்வது பெரும்பாதிப்பையே ஏற்படுத்தும் என்றார்.

உண்மையில் சர்வகட்சிப் பிரதிநிதிகள் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கு பற்றவில்லை. ஏனென்றால் புலிகள் அவர்களைத் தடுத்தனர். ஆனால் புலிகள் இப்போது அரங்கில் இல்லை. இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சுதந்திரமான அரசியல் கட்சியாக தேர்தலில் நிற்கின்றது.

இது தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றக் கூடியதாக இருக்க வேண்டும். அதேநேரம் அரசியல் தீர்வு யோசனையை அவர்கள் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவுக்கு முன்வைக்கலாம் என்றார். (ச-5)

## போராட்டங்களை...

போராட்டங்களை மேற்கொள்வதுடன் பிரார்த்தனையிலும் ஈடுபட வேண்டுகின்றோம்.

பொன்சேகாவுக்கு எதிராக இரு பிரதான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இராணுவ உபகரணங்களைக் கொள்வனவு செய்ததில் முறைகேடுகள் மேற்கொண்டுள்ளதாகப் பொன்சேகாவுக்கு எதிராகக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

ஆனால் கடந்த ஒரு மாதமாக சிறையில் உள்ள பொன்சேகாவுக்கு எதிராக முக்கிய குற்றச்சாட்டுக்கள் எதனையும் அரசால் சுமத்த முடியவில்லை.

மிக் ரகத் தாக்குதல் விமானங்களைக் கொள்வனவு செய்தபோது பெரும் ஊழல்கள் மேற்கொள்ளப்பட்டதாகக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

ஆனால் அரசு ஏன் அது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளவில்லை என அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (ச-5)



















இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.03. 2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.